தென்மொழி

எச்சரிக்கை!

மதமயக்கால் வருமதர்ப்பும் சாதியினால்
வருஞ்செருக்கும் 'மாண்பு'மிக்க
பதவியினால் வருங்கிறுக்கும் பணப்பெட்டி
நல்குகின்ற திமிரும்ஏறி
எதனாலும் தமிழினத்தை, தமிழுணர்வை
அழித்தொழிப்பேன் எனும் முனைப்புச்
சிதறுங்காண் செயலலிதா எக்களிப்பும்
பொய்யாகும் எச்சரிக்கை!

வெட்டுருவாய் நீநிற்கக் கண்டாலும்
விதிர்விதிர்க்கும் பேடிகள் போல்
கட்டுண்டார் தமிழரெல்லாம் என்கின்ற
கனவினிலே மிதக்கின்றாயோ
பட்டுப்போய் விடவில்லை தமிழுணர்வு
முற்றாக எம்மினத்தை
வெட்டுகின்ற உன் முனைப்பு வீழ்ச்சியுறும்
நாள்நெருங்கிற்(று) எச்சரிக்கை!

சுவடி : 26
ஓலை : 11

ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

விலை: 3-00

நமக்கு வந்த மடல்கள்.

O : *1521 :* அன்பார்ந்த ஐயா, இன்று தமிழர்கள் குறித்த ஒரு சிறு செய்தியினை வரைய இம் மடல் எழுதுகிறேன். தமிழகத்தில் அறுபடை வீடுகளில் ஒன்று திருசெந்தூர் ஆகும்: அங்குத் தமிழ்க் கடவுளாகிய முருகன் கோயில் இருப்பதும் தமிழினப் பெண்ணாகிய வேட்டுவக் குல மங்கை வள்ளியை மணந்த கதையையும் தமிழராய்ப் பிறந்தோர் அறிவர். அந்தத் திருசெந்தூர் முருகன் கோயில் 'இன்று' 'ஸ்ரீசுப்பிரமணியர் தேவஸ்தானம்' என்று மொழி மற்றும் பண்பாட்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளதை ஏன் என்று கேட்காத தமிழர்களில் சிலர் அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதற்கு அணி திரள்வது ஏன்? ஐயோ! இரக்கத்திற்குரிய தமிழர்கள் என்று வருத்தப்படத்தான் முடிகிறது. —மா. இளஞ்சித்திரன், கல்லிடைக்குறிச்சி.

: 1522 : பாவலரேறு ஐயா அவர்களுக்கு, தங்களின் அன்புத் தொண்டன் தமிழ்க்கனல் விடுக்கும் மடல். வணக்கம். இம் மடலைக் கனத்த நெஞ்சோடு எழுதுகிறேன். கண்ணீரைத் தூவலில் நிரப்பி எழுதுகிறேன். தங்களின் இளவல் இறந்த செய்தி 6-10-92 அன்றுதான் தெரிந்தது. தங்களுக்கு ஆறாத் துயரம், இது. இத் துயரைத் தாங்கள் தாங்கிக் கொள்வீர்கள்; எதையும் தாங்கும் இயல்பு தங்களுக்குண்டு என்பது, என்னைப் போன்றவர்கள் அறியாததன்று. இருப்பினும் என் துயரை— ஆற்றிக்கொள்ளத்தான் இம் மடல் எழுதுகிறேன், அனைவர்க்கும் என் வருத்தத்தைத் தெரிவிக்கவும்.
— அன்புத் தொண்டன் பூ.வ. தமிழ்க்கனல், ஐயனூர் ஊற்று.

O : *1523 :* பெருமதிப்பிற்குரிய ஐயா! 24-4-92 அன்று பம்பாயிலிருந்து வெளியாகும் நாளிதழான 'மராத்திய முரசு'வில் வெளியான செய்தி கண்டு அதிர்ச்சியுற்றேன். அதாவது, உலக ஒன்றியப் பேரவை (ஐ.நா) செயலரின் பதவிக்காலம் முடியுந்தறுவாயில் உள்ளதால், அந்த இடத்திற்குத் தற்போதைய தலைமைத் தேர்தல் அதிகாரியான டி.என்.சேசனை அமர்த்தம் செய்ய இந்திய அரசின் தலைமை அமைச்சர் பரிந்துரை செய்கிறாராம், புதுதில்லிக்கு வருகை தந்திருக்கும் தற்போதைய ஒன்றியப் பேரவைச் செயலரிடம். —இது செய்தி

எனக்குக் கிடைத்த ''தமிழ்நிலத்'' தில் 'கீழ்வானம் சிவக்கும் தனி ஈழம் கிடைக்கும்' நாள் வெகு தொலைவில் இல்லை. என்ற கூற்றுகள் உள்ளம் குளிரச் செய்தன. ஆனால் மேற் சொன்ன செய்தி நெஞ்சில் கனலைத் தெளித்தது போல அல்லவா வேதனை அளிக்கிறது.

ஏற்கனவே அதே செயலர் முன்னாள் இலங்கையின் இந்தியத் தூதர் 'டிக்ஸிட்'டையும் சந்தித்து பேசியிருக்கிறார். இதே டிக்ஸிட்டாலும் இந்திய— இலங்கை வஞ்சக ஒப்பந்தத்தாலும் நம் மக்கள் பட்ட துயரங்கள் இன்றளவும் மறக்க முடியாத நிலை-

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே"

[திருவளம் தி.பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 26 தி.பி. ௨௦௨௪ — கும்பம் (பிப்-மார்ச் 93) (ஓலை: 11]

அறிஞர்கள் மீது அடக்குமுறை!

தமிழ்நாட்டில் மொழியுணர்வையும், இனவுணர்வையும் நலிவுறுத்தித் தமிழ்மக்களை அடிமைச் சேற்றில் அழுந்த மிதித்து வைக்கும் கொடுமுயற்சியில் இங்குள்ள மாநில அரசும், இந்திய நடுவணரசும் போட்டியிட்டுக் கொண்டு முனைந்து செயல்படுகின்றன!

உடலில் தீப்பற்றி எரிகின்ற நேரத்திலும்' அம்மா! அப்பா!, என்று அழாமல் 'அய்யோ! தெய்வமே! என்று கதறாமல், ,தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்று முழக்கமிட்ட வீரர்கள் உலவிய தமிழ் மண்ணில் 'இந்து விழிப்புணர்வு மாநாடு' நடத்தக் கூடிய அளவுக்கு எதிரிகள் ஏற்றம் பெற்றிருக்கிறார்கள்!

ஆரியர், திராவிடர் பற்றிய வரலாற்று உண்மைகளை ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிடவேண்டும்; அடியோடு மறைத்துவிட வேண்டும் என்னும் ஆரியக்கும்பலின் ஆசை, பாடநூல்களில்

அவ் வரலாறுகளை அகற்றிவிட வேண்டும் என்னும் தீர்மான-மாக அரங்கேறியிருக்கிறது. எத்துணை மோசடி!

வடநாடு ஆரியர்களுக்குரியது; தென்னாடு திராவிடர்-களுக்கு உரியது என்கிறார் அத்துவானி. 'இல்லை, இல்லை! அத்துவானி கூறுவது தவறு; இந்தியா முழுவதுமே ஆரியருடையதுதான்; திராவிடர்களுக்கு நாடேயில்லை!' என்று திருத்தங்கூறித் தெளிவுப்(!)படுத்துகிறார் அத்துவானியின் கும்பலைச் சேர்ந்தவரான மற்றொருவர். எவ்வளவு திமிர்!

அத்துவானியும் செயலலிதாவும் இணைந்து செயல்பட விழைந்து நிற்கின்றனர். இனம் இனத்தைச்சேர்வதில் வியப்படை-வதற்கு ஏதுமில்லை. பதவி வேட்கையும், பண வெறியுங்கொண்டு எத்தகைய இழி செயலுக்கும் துணிந்துவிட்ட கழிசடைத் தமிழர்கள் கைகொடுக்கும் நிலை இருக்கும் வரை அவர்களுக்குக் கொண்டாட்டம் தான்.

ஒருமைப்பாட்டுமந்திரத்தை ஓயாமல் முழங்கிக்கொண்டிருந்-தாலும் மராட்டியத்தில் தமிழர்கள் குறி வைத்துத் தாக்கப் பட்டபோது அம் மாநிலப் பேராய அரசு தாக்கியவர்களுக்கு உறுதுணையாகவே நின்றது. அதைத் தட்டிக் கேட்கும் எண்ணங் கூட நடுவணரசுக்கு ஏற்படவில்லை,

கருநாடகத்தில், ஆளுங்கட்சியினரும் காவல்துறையினரும் சேர்ந்து கொண்டுதான் தமிழர்களைத் தாக்கினார்கள்.

தமிழர்கள் உள்நாட்டிலேயே ஏதிலிகள் ஆக்கப்பட்டார்கள். ஆங்காங்கிருந்து கண்ணீருங் கம்பலையுமாய் அரத்தஞ் சொட்டச் சொட்ட அரண்டோடி வந்தார்கள்.

இத்தகைய கொடுமைகளைக் கண்டும் செயலலிதா அரசு கண்துடைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதே தவிர அவற்றைத் தடுத்து நிறுத்த வலிந்த முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளவில்லை. நடுவணரசுங் கண்டுகாணாதது போலவே நடந்து கொண்டது.

மக்களிடையே மதவெறியை வளர்த்து, அதனையே அரசிய-லாக்கிக், காட்டுவிலங்காண்டிகளும் அறவெறுக்கும் முறைகேடான செயல்களில் ஈடுபடும் அத்துவானி கும்பலின்மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது நடுவணரசு. பகற் கொள்ளையில் ஈடுபட்டு மக்கள் பணம் பல்லாயிரங்கோடியை ஏப்பம்விட்டவர்களின் உறுதுணையோடுதான் ஆட்சி நடத்தவேண்டும் என்றால் அந்த அரசால் நாட்டு மக்களுக்கு என்ன நன்மையைச் செய்துவிட முடியும்?

இத்தகைய நிலைகளைச் சுட்டிக்காட்டியும் இடித்துரைத்தும் எதிர்கால விளைவுகள் எத்தகையனவாய் இருக்கும் என்று எடுத்துரைத்தும் எச்சரித்தால் ஆட்சியாளர்கள் திருந்தும் வழியில்லை. அதற்கு மாறாக அறிஞர் பெருமக்கள்மீது கறுப்புச் சட்டம் பாய்கிறது.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் கடந்த சுறவம் 15 அன்று (27-1-93) தமிழக அரசின் காவல்துறையினரால் தளைப்படுத்தப்பெற்று 'கொடியவர்கள் மற்றும் அழிவு நடவடிக்கைகள் (தடுப்பு)' என்னும் கடுஞ் சட்டத்தின் கீழ்ச் சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

பாவலரேறு அவர்கள் மொழி இனம் நாடு என்னும் நிலையில் பொதுநலத் தொண்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். அவர்தம் சிந்தனை கட்சி அரசியலுக்கும் அப்பாற்பட்டது; கருத்துகள் வெளிப்படையானவை; நடவடிக்கைகள் ஒளிவுமறைவற்றவை. சிறை வாழ்வு அவருக்கு புதியதன்று.

அறுபாண்டு நிறைவை (10 3-93) யொட்டி, அவர்தம் திருக்குறள் மெய்ப்பொருளுரைச் சுருக்கம் (முதல் பகுதி) வெளியிட அன்பர்கள் விரும்பியபடி, வெளியீட்டு விழாவிற்கும் ஏற்பாடு செய்யப்பெற்று, மண்டபத்திற்கு முழுக்கட்டணமும் செலுத்தி நாள் (14 3-93) குறிக்கப்பட்டுவிட்ட நிலையில் உரை தொடர்பான எழுத்து வேலைகளில் முனைந்து ஈடுபட்டிருந்த பாவலரேறு அவர்களைச் செயலலிதா அரசு சிறைப்படுத்தி வைத்துள்ளது.

சட்டம் என்பது மக்களுக்காகத்தான்; சட்டத்திற்காக மக்களில்லை. பொதுமையுணர்வோடு மக்கள் நலம் நாடி அறிஞர்கள் வெளியிடும் கருத்துகள் ஆட்சியாளர்களுக்கு எட்டிக்காயாகக் கசக்கலாம்; கசையடிபோல வலிக்கக்கூடும். அவர்கள் தாம் திருந்துவதற்கு மாறாக அறிஞர்கள் மீது அடக்குமுறையை ஏவினால் அதன் விளைவு எத்தகையதாக இருக்கும்?

உலக அரங்கில் இந்தியா ஒரு பெரிய குடியரசு நாடாக— மக்களாட்சி, மக்கள் உரிமை நாடாகத் தம்பட்டம் அடிக்கப்பட்டாலும், மறுபக்கம் கருத்துரிமை கழுத்து நெரிக்கப்பட்டு அடக்குமுறை ஏவப்படுமானால் அத்தகைய அடக்குமுறையால், அத்துவானிகள் அர்சத்துமேத்தாக்கள் ஒத்துழைப்போடு எத்தனை நாளைக்கு இந்தியஒருமைப்பாட்டைக் கட்டிக்காப்பாற்றிவிட முடியும்? எத்தனை நாளைக்கு மக்கள் எழுச்சியைத் தடுத்து நிறுத்திவிட முடியும்?

—இறை.

பாவலரேறு அவர்கள்
மார்ச்சு-17- வழக்கு மன்றம் வருகிறார்கள்.

'தடா' எனும் கொடுஞ் சட்டத்தில் சிறைப்படுத்தப்பட்டுள்ள நம் ஐயா பாவலரேறு அவர்கள் வரும் மார்ச்சு 17-ஆம் நாள் சென்னை உயர் வழக்குமன்றத்தில் (High Court) சிறப்பு வழக்கு மன்றத்திற்கு அழைத்து வரப் பெற உள்ளார்கள். தென்மொழி அன்பர்கள் அங்குக் கூடுவது ஐயா அவர்களைக் காண வாய்ப்பாக அமையும்.

—அமைச்சர்.

அட்டைப் பாடல்: —இறை.

பொதுவுணர்வுகளில் தமிழர்கள்

தமிழர்களின் பொதுவுணர்வு மிகவும் குறைந்து வருகிறது. தம் தாய்மொழியாகிய தமிழின் பெருமையை இன்னும் இவர்கள் சரியாக உணர முடியாதவர்களாக உள்ளனர். அதன் அடிப்படையில் இருக்க வேண்டிய தமிழின உணர்வும், தமிழ் நாட்டுணர்வும் இவர்களிடம் அறவே இல்லாமல் இருக்கின்றன. எதையும் பொதுநல நோக்கோடும், நாட்டு நல உணர்வோடும் சிந்தித்துப் பார்க்கின்ற மனப்பான்மை வெகுவாகக் குறைந்து வருகிறது. முழுவதும் தந்நலத்திற்காகவே அவர்கள் இயங்குகின்றார்கள். இவர்களிடையே தமிழர் என்னும் இனவுணர்வு மங்கிப்போய், சாதிப்பித்து தலைதூக்கி வருகிறது. தந்நல நோக்கம் கொண்ட நடுத்தரச் செல்வர்கள் இச் சாதிவெறியைத் தூண்டி, அவரவர் சாதிகளிடையே ஆளுமைபெற விரும்புகிறார்கள். அவர்களால் அரசியலில் நுழைந்து, தங்கள் சாய்காலகளை வளர்த்துக் கொள்ளவோ, பிற பொதுநலத் தொண்டு இயக்கங்களில் பங்கு கொண்டு, தங்கள் பண நாட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவோ முடியாத நிலையில் இத்தகைய சாதிவெறியை புகை மூட்டமிட்டுப் பழுத்துக் கனிய வைக்க முயற்சி செய்கிறார்கள்.

தமிழ இளைஞர்கள், தாய்மொழிப் பற்றற்றவர்களாக முற்றும் தங்களை ஆங்கில வேட்கைக்கும், அமெரிக்க, ஐரோப்பிய நாகரிகங்களுக்கும், கட்டற்ற நடைமுறைப் பண்பாடுகளுக்கும் ஈடுபடுத்தி அடிமைப்பட்டுப் போகிறார்கள். கல்வித் துறையில் இவர்களின் நாட்டம் குறைந்து வருகிறது. பெரும்பாலும் முழு நாளையும் இவர்கள் கலை காமப் பொழுதுபோக்குகளிலும் புதுமை விளையாட்டுகளிலுமே கழிக்க விரும்புகிறார்கள். பெற்றோர்களையும், பெரியோர்களையும் பொதுமதிப்புச் செய்வதும் பின்பற்றுவதும் இவர்களிடம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. காதல் களியாட்டங்களிலும், மது, சூதுகளிலும், சண்டை, சச்சரவுகளிலும் இவர்களின் ஈடுபாட்டுணர்வு மிகுந்து வருகிறது. ஆடவ இளைஞர்களுக்கும் பெண் இளைஞைகளுக்கும் இவ்வகையில் சிறு சிறு வேறுபாடுகளே இருந்து வருகின்றன. தங்களின் தனி ஒழுக்கச் சிந்தனைகளைத் தவிர்த்துக் கொண்டு, சிறு சிறு குழுக்களாகவோ கூட்டங்களாகவோ இவர்கள் இயங்க விரும்புகின்றனர். இதன் விளைவால் இவர்களிடம் இருக்கவேண்டிய கலையுணர்வுகள், வீரமுனைப்புகள், கொள்கை நோக்குகள், வெற்றி இலக்குகள் மிக வேகமாகக் குறைந்து வருகின்றன. தமிழ்மொழியை இவர்கள் அறவே விரும்புவதில்லை.

இன உணர்வு என்பது இவர்களிடம் மருந்துக்கும் இல்லை. மாறாக, சாதி உணர்வு இவர்களிடம் ஆழமாகவோ, மேலோட்டமாகவோ வேரூன்றி இருக்கிறது. இவர்கள் தம் பெற்றோர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள விரும்புவதும் இந்தச் சாதிவுணர்வையும், அவர்கள் இவர்களுக்காகச் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களையுந்தாம்; நம் நாடு முன்பிருந்த நிலை, இப்பொழுது அடிமைப் பட்டுக்கிடக்கும் நிலை, அதன் வரலாற்று மேம்பாடுகள், அவற்-

றின் வீழ்ச்சிகள் ஆகியவை பற்றியெல்லாம் இவர்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை; அவற்றைப் பற்றி இவர்கள் தெரிந்துகொள்ள விரும்புவதும் இல்லை. பெரும்பாலும் இவர்களின் கல்விக் காலத்தின் முக்காற் பகுதியை வெறும் பொழுது போக்குகளிலேயும், வெட்டிப் பேச்சுகளிலுமே வீணாக்கி வருகின்றார்கள். ஆழமான உணர்வுகள் இவர்களிடம் எப்போதும் எதிலும் இருப்பதில்லை. மேலோட்டமான கொறித்தல் உணர்வுகளே இவர்களிடம் குடிகொண்டுள்ளன. அறிவுக்கும் மனவுணர்வுக்கும் ஊற்றமான செய்திகளை இவர்கள் காதுகளிலேயே போட்டுக் கொள்ள விரும்புவதில்லை. இவர்களது எதிர்காலம் உறுதியற்றதாகவும் ஒரு நோக்கமும் அற்றதாகவுமே உள்ளது.

ஆசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகியோரிடமிருந்து இளைஞர்கள் கற்றுக்கொள்வதெல்லாம், இவர்களின் வாழ்க்கைக்கு உதவாத வெறும் மேம்போக்கான உணர்வுகளே! இவர்களின் பேராசிரியர்களும் பெரும்பாலும் இவர்களைப் போன்ற உணர்வுடையவர்களே! இவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், வெறும் தொழிலுணர்வு அடிப்படையிலேயே அதை இவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். அவர்களுக்கும் தமிழ் மொழியைப் பற்றிய உண்மை வரலாறோ, சிறப்பியல்களோ தெரியா. சரியான தமிழ்மொழி அறிவையும் இவர்களில் மிகப் பலர் கொண்டிருப்பதில்லை. தமிழ்மொழியைப் பற்றிய இலக்கணத்திலோ, இலக்கியங்களிலோ இவர்களுக்கு ஆழமான பயிற்சியிருப்பதில்லை. எப்படியேனும் தாங்கள் கற்ற தமிழ் மொழி அறிவை வைத்துக் கொண்டு பிற அறிவியல் படித்த பேராசிரியர்களைப் போலவோ, பிற அதிகாரிகளைப் போலவோ, அல்லது வாழ்க்கையில் மிக மேம்பட்டு விளங்கும் பிற அரசியல் தலைவர்களைப் போலவோ, திரைப்படக் கலைஞர்களைப் போலவோ, பொருளியலிலும் வாழ்வியலிலும் வளம் பெறத் துடிக்கிறார்கள். அந்த ஆசையால், இவர்கள், தாங்கள் மொழியாசிரியர்கள் என்பதை மறந்து, தங்களின் தாய்மொழியான தமிழை எந்த அளவுக்கும் கீழ்மைப்படுத்தவும் தாழ்த்தவும் என்றும் தயங்குவதில்லை. தமிழ்ப் பேராசிரியராக உள்ள ஒரு சிலர், தாங்கள் ஏதோ ஓரளவு அறிவியல் படித்த காரணத்தால், தமிழ்மொழிச் சீர்திருத்தக்காரர்களாகத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, அதன் எழுத்துகளையும், மொழி நிலைகளையும், இலக்கண மரபு நிலைகளையும், பல்வேறு வகைகளில், தங்கள் மனம் போனவாறு சிதைக்கத் தொடங்கிச் செயல்பட்டு வருகிறார்கள். இவர்களில் சில மண்டை வீங்கிகள் எவரையும் பொருட்படுத்தாமல், தமிழ் மொழி எழுத்துகளை அளவுக்கு மீறிச் சிதைத்துச் சீரழிக்கிறார்கள். இவர்களுக்கு உண்மையான தமிழ்ப்பற்றும் இருப்பதில்லை; தமிழினப் பற்றும் இல்லை. தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்னும் எண்ணம் ஒரு சிறு அளவிலும் இவர்களுக்கு இல்லை. எவ்வாறேனும் தாங்கள் முன்னேறினால் போதும் என்று எண்ணியே கரவாகச் செயல்பட்டு வருகிறார்கள். இவர்கள்

தங்கள் குழந்தைகளை ஏதோ ஐரோப்பிய நாட்டுக் குழந்தைகளைப் போலவே நடை, உடை, பழக்கங்களில் வளர்த்தெடுக்கிறார்கள். தமிழ்மொழியைச் சிதைக்கின்ற பிற மொழியாளர்களை விட, இவர்கள் அதிகமாக இம்மொழிக்குத் தீங்கு செய்கிறார்கள்.

இனி, தமிழ்நாட்டில் உள்ள இயக்கங்களைப் பற்றியோ, அவற்றின் தலைவர்களைப் பற்றியோ நினைக்கவே முடியவில்லை. அவர்களின் முழுநோக்கமே தந்நலந்தான். எங்கேனும் தந்நலமற்ற தமிழ்த் தலைவர்கள் ஒருசிலர், தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் உண்மையாகப் பாடுபடுகிற நோக்கத்துடன் இருப்பார்களானால் அவர்கள் எங்கோ ஒரு மூலையில் அடங்கிக் கிடக்கிறார்கள்; அல்லது அடக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்களை எவரும் மதிப்பதில்லை. அவர்களின் திறப்பாடுகளை எவரும் வெளிக்கொணர்வதில்லை. அவர்களின் இலக்கிய ஆக்கங்களையோ, தமிழ்மொழித் தொண்டையோ, எவரும் பாராட்டுவதுமில்லை; பயன்படுத்திக் கொள்வதுமில்லை. தமிழ்த் தலைவர்கள் என்பவர்களோ, தமிழினத் தலைவர்கள் என்பவர்களோ எவரும் இவர்கள் பக்கம் தலைவைத்தும் படுப்பதில்லை. அவர்களுக்கு இவ்வொன்றுமறியாத, அடிமைப்பட்டுக்கிடக்கும் பேதைத்தமிழர்களை எவ்வாறு தங்கள் தந்நல வெறிக்குப் பயன்படுத்திக் கொள்வது, தங்கள் பொருளாசைகளை அவர்களைக் கொண்டு, எப்படி நிறைவேற்றிக் கொள்வது, எவ்வாறு தங்களுக்கும் தங்கள் தலைமுறையினர்க்கும் சொத்துகள் சேர்ப்பது என்பவற்றிலேயே, அவர்கள் முழுக் கவனமும் ஒன்றித்துப் போகிறது. அரசியல் என்பது அவர்களின் முழுநேர ஆடு களமாகி விட்டது. காலத்துக்கேற்ப, இடத்துக்கேற்ப, சூழலுக்கேற்ப, தங்கள் அரசியல் நடவடிக்கைகளை மாற்றி மாற்றி அமைத்துக் கொண்டு, அவர்கள் ஆடிவரும் கண்ணீர் நாடகங்களில், தமிழ்நாட்டு மக்கள் மிகக் கவர்ச்சி கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கேற்பத் தங்கள் நாடகக் கதைகளை அவ்வப்பொழுது மாற்றி, மாற்றி, ஆடிக்காட்டிப் பொது மக்களின் கவனம், தங்களை விட்டு வேறுபக்கம் திரும்பிவிடாதபடி கண்காணித்துக் கொள்கிறார்கள். பேசுவதில் இவர்கள் மிகவும் சூரர்கள்! நடிப்பதில் இவர்கள் வல்லாண்மை வீரர்கள்!

அரசியல் என்பது வெறும் அரசியலுக்காகவே இங்கு நடத்தப் படுகிறது. மக்கள் பயனுக்காக அரசியல் என்பதெல்லாம் மலையேறி வெறும் பகல் கனவாகப் போய்விட்டது. படிப்பதும், படித்துவிட்டு வேலை தேடுவதும், பின்னர் தேடிய வேலையைத் திறம்படச் செய்து, வாழ்க்கை நலத்துக்கான செல்வத்தைத் தேடுவதும் என்பனவெல்லாம், அரசியல் வாழ்க்கை வலுப்பெற்ற பின் வேண்டாத மாயத் தேவியற் கதைகளாகப் போய்விட்டன. இப்பொழுது படிக்காமலும், ஒரு தொழிலில் பயிற்சி பெறாமலும், பணங் கொழிக்கும் செல்வச் சுரங்கமாக அரசியல்துறை விளங்குவதால், ஆண்களெனப் பிறந்த அத்தனை மக்களும் ஏன் பெண்களும்கூட, மீசையும் பேச்சும் முளைத்துக் கருக்கூடும் முன்னரே, அரசியலில் சொட்டைபோடத் தொடங்கிவிடுகின்றனர். வேறு

பிறவகையான உடலுழைப்பு, அறிவுழைப்புத் தொடர்பான அனைத்துத் துறைகளுமே, வேண்டாத வெறுக்கத் தகுந்த, அவ்வாறு விரும்பினாலும், முன்னேற வாய்ப்புக் குறைந்த ஒதுக்கப் பட்ட தாழ்த்தப்பட்ட துறைகளாய்ப் போய்விட்டன. பொதுமக்களுக்குப் பெருந் தொடர்பான வாழ்வியல் துறைகளாக அரசியலும் கலையியலும் கொடிகட்டிப் பறக்கின்றன. எழுந்தால் அரசியல், விழுந்தால் கலைத்துறை அஃதாவது திரைப்படத்துறை என்னும் அளவில் தமிழ்நாடே ஏன் இந்தியாவே நாறி வருகின்றது!

அரசியல் நிலையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி நிலையும் இக்கால் சீர்கெட்டே கிடப்பதை எவரும் மறுக்கமுடியாது, தமிழர்களிலும் அதிகாரிகளாக வரப் பெற்றவர்களிடை, தமிழ்ப் பற்றோ, தமிழினப் பற்றோ, இயல்பாக இருக்கவேண்டிய பொதுநல உணர்வோ இல்லாமல் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கது; தமிழர்களில் அதிகாரிகளாக இருப்பவர்கள் தங்கள் இனம் மேம்பட்டு வரவேண்டும் என்னும் எண்ணங் கொண்டவர்களாக இல்லை தங்களின் கீழ்ப் பணியாற்றும் தமிழினத்தவரிடம் உள்ளன்பு கொண்டவர்களாக நடந்துக் கொள்வதில்லை. ஏதோ அவர்கள் வேற்றினத்தவர்களைப் போலவே அவர்களைக் கருதி வெறுக்கின்றனர்; இன்னுஞ் சொன்னால் இரக்கமில்லாமல் அவர்களுக்குத் தீங்கிழைக்கின்றனர். கரடி, புலி, நாய்களைப்போல் கடுமையாக விழுந்து பிடுங்குகின்றனர். அவர்களிடம் இனவுணர்வோ, பொதுவுணர்வோ துளியும் இருப்பதில்லை. ஒரு மலையாளியோ தெலுங்கரோ, அல்லது வடநாட்டுக்காரரோ தம் இன மக்களிடம் காட்டும் பரிவுகளைத் தமிழின அதிகாரிகள், தமிழின ஊழியர்களிடம் காட்டுவதில்லை ஏனோ தெரியவில்லை, தமிழர்கள் தங்கள் இனத்தவரையே வெறுக்கிறார்கள்; தங்கள் இனத்தவரையே தாழ்த்துகிறார்கள்; வீழ்த்துகிறார்கள். அதில் வெற்றி பெற்று மகிழ்கிறார்கள்.

அரசியல் வலிமை பெற்று ஆட்சிக்கு வந்தவர்களும் சரி, வருபவர்களும் சரி, ஏதோ தாங்கள் கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பைப் பெற்றுத் தங்களுடைய திறமையால் அவ்விடத்துக்கு வந்தவர்களைப் போலத் தங்களை அளவுக்குமீறிக் கருதிக்கொண்டு, செருக்கும் தருக்கும் மிக்கவர்களாகவே, பொதுநலவுணர்வு கொஞ்சமும் இன்றிச் செயல்பட்டுத் தங்கள் நலன்களையும்-வளங்களையும் பெருக்கி கொள்வதிலேயே மிகவும் கண்ணும் கருத்துமாக நடந்துக் கொள்கின்றனர். அவர்களின் ஆட்சிக் காலத்தில், தமிழ்மொழிக்கென்றும், தமிழ் இனத்துக்கென்றும், ஏதோ அங்கொன்றும்—இங்கொன்றுமாகச் செய்துவிட்டு அவற்றையே தம்பட்டமடித்து விளம்பரப்படுத்திக் கொள்கின்றனர். இவர்கள் செய்யும் ஓரிரண்டு நலன்களை, ஏதோ இவர்கள் தங்கள் முன்னோர்களின் சொத்துக்களைக் கொண்டு செய்தவர்கள் போலவும், தங்கள் உழைப்பினால் வந்த ஊதியங்களைக் கொண்டு, செய்தவர்கள் போலவும் பீற்றிக்கொள்வது, மிகவும் அருவருக்கத் தக்கதாக உள்ளது. இவர்களுக்கு மக்கள்மேல் துளியும் அன்பிருப்பதில்லை.

அவர்களின் முன்னேற்றங்களில் உண்மையாகவே அக்கறையிருப்பதில்லை. இனி, தமிழ்நாட்டில் கலைத்துறை என்றாலே திரைப்படத் துறை என்று பொருள்படும்படி, அத்தனைக் கலைத்துறையாளர்களும் அங்கேயே மண்டிக்கிடப்பது காலத்தின் கோளாறு என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. அதில் ஈடுபட்டு, மதிமயங்கிக் கிடக்கும் பாடலாசிரியர்களானாலும் இசையாசிரியர்களானாலும், நடிகர்களானாலும் கருவியியல், நாடகவியல், கலைஞர்களானாலும் கதை, உரையாடல் எழுதும் எழுத்தாளர்களானாலும் அவர்களுக்குத் தமிழ் மொழிப்பற்றும் இருப்பதில்லை. தாயினப் பற்றும் இல்லை. இவ் வினம் ஒரு சிறு அளவிலாவது தங்களால் முன்னேற வேண்டும், என்ற ஆர்வமோ—அக்கறையோ அவர்களுக்கு அறவே இல்லை. தங்கள் கூத்தடிப்புகளுக்கேற்ற கொம்மாளங்களும், அவற்றுக்கும் மீறிய பொருள் வருவாயும் இருந்தால் போதும். மொழியோ, இனமோ, பொதுமக்களோ, நாடோ எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்னும் கொள்ளையடிப்பு மனப்பான்மையுடனேதான் இயங்குகின்றார்கள்.

இனி, இவர்களுக்கெல்லாம் மேலாக இங்குள்ள செய்தித் தாள்களும் கலை, அறிவியல் இதழ்களும் பொது நலனில் வழிப்பறிக் கொள்ளைக் கூடங்களாகவே நடந்துக் கொள்கின்றன, திரைப்பட விளம்பரக் குவியல்களுக்கிடையே, பொது மக்கள் நலங் கருதிய ஓரிரண்டு செய்திகளை வெளியிட்டால் போதுமென்பதே அவர்களின் திட்டமான கருத்தாக இருக்கிறது. விலை மகள்களைப் போல் நடந்துகொள்ளும் இவர்களிடம் தமிழ்மொழி நலனையோ, இன முன்னேற்றத்தையோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இவ்வாறாக, விளைய வேண்டிய நாற்றங்கால்களில் எருமைக் கூட்டம் புகுந்து உழைப்பும் நிலையில் உள்ள நம் அருந்தமிழ் மொழியும், இனமும், எதிர்கால உரிமைக் கனவுகளில்மூழ்கியிருக்கும் நாடும், எப்படிதான் தப்பி நின்று, நாம் மீட்டெடுக்கும் கொள்கை காலத்தை நோக்கி நடையிடப்போகின்றனவோ; அஃது நம்மை உருவாக்கி; வெளிப்படுத்தி, வழி நடத்திக் கொண்டிருக்கும் இயற்கை அன்னைக்கே வெளிச்சம்! அதுவரை நாம் நம் கடமைகளை விருப்பு—வெறுப்பும், மனச் சோர்வும் இன்றிச் செய்து கொண்டிருப்பது தான் நமக்கிட்ட கட்டளையாகக் கொள்ள வேண்டும்!

—பெருஞ்சித்திரனார்.

தென்மொழி வெளியீட்டு உரிமை அறிக்கை!

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 19[illegible] 19-ஆ. ஆ. (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்	:	சென்னை
2. காலமுறை	:	மாதம் ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர்	:	திருவாட்டி. மா. தாமரை
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
4. வெளியிடுவோர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
5. ஆசிரியர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
முகவரி	:	சென்னை-5
ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவர்களும்		திரு. பெருஞ்சித்திரனார் சென்னை-5.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

இந்தியைத் தடுக்க முடிந்ததா, நா்மால்?

செருக்குப் பிடித்தவர்கள் நாம்! மண்டைக் கொழுப்பு உருகி, நம் கண்களை மறைக்கின்றது; நமக்குள் உள்ள பொறாமைப் புகைச்சல்கள் இன்னும் தீரவில்லை. உள்ளத்தின் நமைச்சல்கள் நாளுக்கு நாள் மிகுந்து கொண்டே வருகின்றன. தீட்டிய கத்தியை நம் அண்ணன் தம்பிகளின் முதுகிலும், மார்பிலுமே செருகிக் கூர் பார்க்கின்றோம், நாம்! ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க மறுக்கின்றோம். நம்மில் யார் தாழ்ந்தவர், உயர்ந்தவர் என்று அளந்து பார்த்துவிடத் துடிக்கும் வெறித்தனம்; இன்னும் நமக்குப் பல நூற்றுக்கணக்கான சிக்கல்கள்! ஆளுக்கொரு சிக்கலாய் அவிழ்த்துப் பார்த்துவிட முனைகின்றோம், நாம்! நமக்குள்ள பொதுச் சிக்கல்கள் எல்லாவற்றையும் ஒரேயடியாகத் தீர்த்துக்கட்டும், ஓர் அடிப்படைச் சிக்கலை, அனைவரும் பார்த்தும் பாராததுபோல், கேட்டும் கேட்காததுபோல், முகத்தில் சீலைத் துணியைப் போட்டு மறைத்துக்கொண்டு திரிகின்றோம். ஒருவர் வடக்கே பார்த்தால், மற்றவர் கிழக்கே பார்க்கின்றோம். ஒருவர் கிழக்கே போனால், நாம் மேற்கே போகின்றோம்! நமக்குள் ஒற்றுமை இன்னும் கால் கொள்ளவில்லை. ஒருவரை ஒருவர் தின்று தீர்த்துவிட நினைக்கின்றோம். ஒருவருக்கொருவர் நாடி நரம்புகளை அறுத்துக் கொள்ள, குரல் வளைகளை நெரித்துக் கொள்ள, வரிந்து கட்டிக் கொண்டு அலைகிறோம்.

நம்மில் புதுச்சிந்தனைகளும் இன்னும் தோன்றவில்லை. நேற்றுப் பேசியதையே இன்றும் பேசித் திரிகின்றோம். ஆட்டிய மாவையே ஆட்டுகிறோம். உண்டதையே கக்கி உண்கிறோம். நம் தலைகளை நாமே பிய்த்துக்கொண்டதால், நம் தலைகள் சொட்டையாய்ப் போனதை நாம் இன்னும் உணரவில்லை: நம் கைகளில் யார் கழுத்தையோ நெரிப்பதற்காக உகிர்களை வளர்த்துக் கொண்டு வருகிறோம். நம் எதிரியை நாம் அடையாளம் காண முடியவில்லை: நம்மை நாமே அளவுக்குமீறிப் பாராட்டிப் பறைசாற்றிக்கொண்டு திரிகின்றோம். நம் எழுத்துகள் நமக்கு வயிரக் கற்களாய் மின்னுகின்றன. நம் பேச்சுகள் நமக்குக் கிண்கிணி ஒலிகளாய்க் கேட்கின்றன. ஆ! நாம் எவ்வளவு வளர்ந்து விட்டோம் என்று தலைதெறிக்க ஆட்டுகின்றோம்.

வாய்விட்டுச் சிரித்துக் கொள்ள நம்மால் முடியவில்லை: தொண்டைக்குழியை நம் அகங்காரக்கொழுப்பு அடைக்கிறது. நம் நெஞ்சாங் குலையின் ஒவ்வொரு துடிப்பிலும் நம்மை நாமே புகழ்ந்து பாடிக்கொள்ளும் தாள இசை கேட்கிறது: நாம் நமக்காகவே என்னும் நம் நெஞ்சத்தின் கள்ளப் பண், நம் பசப்புப் பேச்சுகளால், இசை மாறிக் கேட்கிறது, நாம் யாருக்காகவோ வாழ்வதாகப் போலிச் சிரிப்புச் சிரிக்கிறோம். தோள்களை நன்றாக தடிக்க வைத்து ஆட்டுகிறோம்!

நாம் கோடிக் கோடியாய்ச் சேர்த்து வைத்திருக்கும் கள்ளப்பணம், நம் பெட்டியில் யாருக்காகவோ காத்திருக்கின்றது. அதைக்கொண்டு அழியாத புகழை விலைக்கு வாங்கிவிடப் பேரம் பேசுகிறோம். நமக்கு முன்னவர்களின் சிலைகளைத் திறந்து, அவர்களின் காலடிகளில் நம் பெயர்களை எழுதிவிடத் துடிக்கின்றோம்! அவர்களின் பெயர்களைச் சொல்லியே, அவர்களின் பெயர்களுக்கு மேல் நம் பெயர்களை, அழித்து எழுதிக் கொள்ளத் துடிக்கின்றோம். நம் மூளைத் திரட்சியில் உள்ள விலை போகாத சரக்குகளுக்கெல்லாம், அவர்களின் முத்திரைகளைக் குத்தி, கள்ளச் சந்தையில் விலை பேசித் திரிகின்றோம். நாம் யார் என்பது நமக்குத் தெரிகிறது; பிறர்க்குத் தெரியாது என்று நம்பிக் கிடக்கின்றோம். ஆனால், நம் தலைவர்கள் ஆக்கிக்கொடுத்த தன்மானக் கண்ணாடியில், நம்மைப் பார்த்து அருவருப்படைந்து, முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு. அவர்கள் ஏளன நகை செய்கிறார்கள் என்பதை ஏன் நம்மால் பார்க்க முடிவதில்லை? கலைவாணர் 'நல்ல தம்பி'யில் சொல்லுவார் நம் கண்களில் சதை வளர்ந்திருக்கின்றது, என்று! வெறும் சதையன்று! ஊளைச் சதை!

உண்மையைப் பார்க்க நம் கண்கள் கூசுகின்றன! யார் யாரிடமோ, திரைக்கு மறைவில் எழுதி வாங்கிய நூலில் நம் பெயர்களை அச்சிட்டுக்கொண்டு. வெளியீட்டு விழாக் கொண்டாடுகிறோம்! நம்மை வாழ்த்திப் பேச வந்தவர்களின் வெட்கங்கெட்ட பேச்சை, 'இந்திர'த்தனமாக நாம் வெளியிட்டுக் கொள்கிறோம். அகலிகைக்கும் தெரியாதா? இந்திரன் யார்? கவுதமன் யார் என்று? இருப்பினும் இன்ப நமைச்சலைத் தீர்த்துக்கொள்ளப் 'பத்தினி'த் தனமாகத்தானே இருந்தாள்?

எழுதத் தெரியாத எழுத்தாளர்களாக, பேசத் தெரியாத-பேச வராத பேச்சாளர்களாகத் தானே நாம் இருக்கிறோம்: வெறும் எழுத்துகளை நிரப்பிப் பாடல்கள் என்கிறோம்! காது புளிக்கக் கத்துவதை இசை என்று நம்ப வைக்கின்றோம்! பணம் பத்தும் செய்கிறது. பணமில்லாதவனுக்குள்ள பத்தும் பாழாகிறது. பொருள் சோர்வு படும்'— என்பது திருவள்ளுவர் காலத்திலுமா இருந்தது; நம்ப முடியவில்லையே! இன்று நடக்கின்ற வெள்ளித் திரைக் கூத்துகள், அவருக்கெப்படி அன்றே தெரிந்தன?

நம்ம சாதியானாகவே பார்த்து நம் பக்கத்தில் வைத்துக் கொள்கிறோம்; அவனைக் கொண்டே நம்மைப் புகழச் செய்கிறோம், யாருக்கு என்ன வந்தது? ஏன் இந்தக் கூப்பாடு போடுகிறோம்.

சிங்களவன் அடித்து விரட்டுகிறான், நம் தம்பியை! சேலையை அவிழ்த்துப் பார்க்கிறான், நம் தங்கையை! இங்கு, வாய்ப்பேச்சால் அவர்களுக்கு வாழ்வளிக்கப் பார்க்கிறோம். எவனையோ நோக்கி, எடு படையை என்று தொண்டை கிழியக் கத்திக்கொண்டிருக்கிறோம், நாம்! போதுமா, நமக்கு வீரம்? புளிப்பேறிக் கிடக்கின்றன நம் பணங்கள்! அவற்றைக் குண்டுகளாக மாற்ற எத்துணை

நேரமாகும் நமக்கு? துமுக்கிகளில் அவற்றைத் திணித்துச் சிங்களவனின். உயிர் நாடிக்குள் ஊடுருவச் செய்ய எவ்வளவு நேரம் பிடிக்கும் நமக்கு? மேனு மினுக்கித்தனமாக, கையையும் காலையும் உதைத்துக்கொண்டு பேசித் திரிகின்றோம். நாம்! பெட்டி நிறையப் பணம் வழிந்து கொட்டியும், போதவில்லையே நமக்கு! வேட்டிகளை அவிழ்த்து விட்டுக் கொள்கிறோம்! சேலைகளை அதிகப்படுத்திக் கொள்கிறோம்! பருக்கைக்கும் படுக்கைத் தனத்திற்கும் பணம் வேண்டாமா? அதற்கு, இதற்கு என்று ஆலாய்ப் பறந்து, மக்களிடம் கைநீட்டி, மடி நிரப்பிக் கொள்ளக் துடித்துக் கிடக்கிறோம். சேர்த்த பணத்தில் சென்னையை மட்டுமென்ன, தில்லியையும் சேர்த்து விலைக்கு வாங்கலாமே, நாம்!

ஆனாலும் வடவனுக்கு வால் பிடிக்கவே துடிக்கின்றோம்! பதவிக்குப் 'பரதம்' ஆடுகின்றோம்! உதவிக்கு ஊரைக் கூட்டுகிறோம்! கண்ணீரில் மூழ்குபவர்களைக் காப்பதற்குத், தண்ணீரில் குதித்தால் என்ன? தலையா முழுகிவிடும்? பாளையங் கோட்டையைப் பார்த்த நமக்கு, செயின் சார்சுக்கோட்டை எதற்கு—தில்லிக் கோட்டையன்றோ நம் குறி?

வடவன் என்ன புலியா: உளியமா, காண்மாவா, உளைமாவா? புலியடித்துச் சாவதற்கு முன் கிலியடித்துச் செத்தால் என்னவது? எழுந்து நிற்கவேண்டியது தானே, நாம்! ஏடாகூடம் பேசிகொண்டிருந்தால் எது நடக்கும்? துணிந்தவனுக்குத் துமுக்கியென்ன? தூக்குக் கயிறென்ன? நம்மில் ஒரு பிந்தரன்வாலே கூடவா, இல்லை? தமிழ் மண்ணை வடவர்களின் வணிகக் கூடமாகும்போது, நம் உடம்பு மண் உலைக்கூடம் ஆனால் என்ன?

'அடே! அடே! தில்லிக்காரா! எங்களவன் சிங்களவனால் கடித்துக் குதறப்படுகிறான்! நீ இந்தியாவை ஒன்றென்கிறாய்! இந்தியாவில் தமிழ்நாட்டை இணைத்துவிட்டுப் போய்விட்டான், இங்கிலாந்துக்காரன்! எனவே, படையாளிகளும், கருவிகளும் உன் கடை நாய்களாகிப் போய்விட்டன! ஒன்றால், தமிழ் நாட்டவன் தம்பியைக் காக்க நீ படையை நடத்து! அன்றால் படைக் கருவிகளை எங்கள் கைகளில் கிடத்து! அதுவும் ஒத்து வராதது என்றால், எங்கள் மண்ணை எங்களிடம் கொடுத்துவிடப்பா நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், எங்களுக்குரிய சிக்கலை! உங்களுக்கும் எங்களுக்கும் என்றைக்குமே ஒத்துவராதப்பா'' என்று ஓரே உறுமலாய் உறுமிட வேண்டியதுதானே? ஒரே முரசாய்க் கொட்டிவிட வேண்டியதுதானே? நாம், ஏன் அஞ்சிக் கிடக்க வேண்டும்? அவனிடம் கெஞ்சிக் கிடக்கவேண்டும்?

இங்கு இராசீவ் போலும் இளைஞர்கள் இல்லையா? தூணைத் துரும்பாக்கும் பேச்செதற்கு? எட்டி உதைத்தால் இலங்கை இருக்கும் இடம் தெரியாமல் இந்துமா கடலிலே போய் முழுகி விடுமே! அதற்காகப் பத்தினிப் பெண்களைப் பறிகொடுப்பதா? அவர்களின் கற்பழிப்பைக் காதுகள் கேட்பதா?

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்

—என்று நமக்குத்தானே ஆண்மை இலக்கணம் பாடி வைத்தார் திருவள்ளுவப் பேராசான்? அந்த வீரம் வெறும் நாற்காலி வீரமாகப் பேசுவதா?

இந்தியை எதிர்க்கின்றோம்! எதிர்க்கின்றோம்! இன்னும் எதிர்த்துக் கொண்டு கிடக்கின்றோம்! இதை ஏமாளித்தனம் என்பதா? கோமாளித்தனம் என்பதா? இந்தி யெதிர்ப்புக்கு ஒரு போராட்டம்! வகுப்புரிமைக்கு ஒரு பேரணி! மங்களா தேவியம்மன் கோயிலுக்கு ஒரு படையெடுப்பு! கச்சத் தீவுக்கு ஓர் அறிக்கை! சேதுக் கால்வாய்க்கொரு வேண்டுக்கோள்! மண்டல் குழுவுக்கு ஒரு மறியல்! கோயில் வழிபாட்டுக்கு ஒரு கூப்பாடு! சமசுக்கிருத வல்லாண்மைக்கு ஒரு மாநாடு!சாதியொழிப்பிற்கு ஒரு தீர்மானம்! தமிழீழத்திற்கு ஒரு பேரணி! இப்படி எத்தனை எத்தனை இழிவுகளுக்கு எல்லாம் தனித் தனியாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஒப்பாரி வைப்பது? அழுவது? ஒரே அழுகை அழுதுவிட்டுப் போவதில் நமக்கென்ன அத்தனைத் தடங்கல்! ஏதுங்கெட்ட இந்தி மொழி ஒன்றைத் தடுக்க ஐம்பது ஆண்டுகள் போராடுவதா? பெரியார் என்ன? சோமசுந்தர பாரதி என்ன? அண்ணா என்ன? ஈழத்தடிகள் என்ன? மறைமலையடிகள் என்ன? பாவாணர் என்ன? பாரதி தாசன் என்ன?—இவர்கள் எல்லாரும் 'இலேசு'ப்பட்ட ஆள்களா? இந்தி எருமை பின்வாங்கியதா? இல்லையே! பின், இன்னும் என்ன வாழ்கிறது? ஏன் நமக்குள் தயக்கம்? என்ன மயக்கம்? ஒரேடியாகத் தீர்த்துக் கட்ட நாம் முயல வேண்டுவதுதானே!

அழைப்பு விடுகின்றோம், நாம்; அணி சேர்க்க நம்மிடம் போதிய படையில்லை என்பதால்! அறை கூவுகிறோம் நாம்; நாம் தானைத் தலைவர்கள் இல்லை என்பதால்! தயங்கிக் கிடக்கிறோம் நாம்; நாம் தளபதிகளாகச் சொல்லிக்கொள்ளவில்லை. ஆதலால்! ஆனால், நாமும் தனித்தாவது எம்பிக்குதிக்க எத்தனை நேரம் ஆகும் நமக்கு! பார்த்துப் பார்த்துப் பதுங்கியிருந்தோம்! பயனில்லை என்பதால் ஆர்த்தெழ நாம் முடிவு கட்டிவிட்டோம்! அணிதிரள்கிறோம்! நடையிடும் நாள் அண்மையில் வருகிறது. எழுந்து விட்டோம் நாம்! இனி நமைத்தடுக்க எவரும் இல்லை நம்மிடத்தில்! எழுக இளைஞர் படையே! எடுத்தடி வைக்கின்ற நாளை எதிர்பார்த்திருங்கள்?

—பெருஞ்சித்திரனார்.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு ருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்.

குருவின் பெருமை

—புலவர், கடுங்கோ.

இலக்கிய விரிவுரைக்காகக் குறிப்புகள் எழுதுவதில் ஈடுபட்டிருந்த நான் ஏதோ ஆளரவங் கேட்டுத் திரும்பினேன்.

நண்பர் ஐயனார் வந்து கொண்டிருந்தார்; அவரை வரவேற்று நலம் உசாவினேன்.

'என்ன ஐயா; இப்படிச் சிக்கலில் மாட்டி விட்டு விட்டீர்கள்?' என்று அவர் என் மீது குற்றஞ்சாட்டிய போது முதலில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

'என்ன சிக்கல்?'

''குரு என்ற சொல்லை நீங்கள் கையாளுவதைப் பார்த்துக் கட்டாயம் அது தமிழ்ச் சொல்லாகத்தான் இருக்கும் என்று கருதிக் 'குருபாதம்' என்னும் பெயர் தமிழ்தான் என்று அடித்துப் பேசி ஒருவரிடம் பணயம் கட்டி விட்டேன்'' என்று ஐயனார் தம் சிக்கலுக்கான காரணத்தை விளக்கினார்.

'சரி அதனால் என்ன?'

''என்னவா? குரு என்பது வடசொல் என்று பன்மொழிப் புலவர்கள் சிலர் கூறுகிறார்கள்; வடமொழியில், 'கு' என்றால் இருள்; 'ரு' என்றால் நீக்குவது; ஆகையால் அறியாமை இருளை நீக்கும் ஆசிரியர் குரு என்று அவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். அவர்களுக்கு மறுமொழி கூறமுடியாமல் திண்டாட வேண்டியிருக்கிறது'' என்று அங்கலாய்த்தார் ஐயனார்.

குரு என்பது வடமொழியிலும் பெருக வழங்கும் தமிழ்ச் சொல். அது இருள் நீக்கமாகிய ஒளிப்பொருள் பெற்றிருப்பதும் தமிழின் அடிப்படையிலேயே யாகும். அதற்கு அறியாமை நீக்கப் பொருள் கற்பிப்பது வலிந்த முயற்சியே. ஆசிரியர் (ஆசு + இரியர்) என்பதற்கிணங்க வடமொழியாளரும் அவ்வாறு கூற முற்பட்டனர் போலும்!

'மறைமலையடிகளார், பாவாணர் இருவருமே குரு என்பது தமிழ்ச் சொல் என்று குறிப்பிட்டிருப்பது நீங்கள் அறியாததா?' என்றேன்.

''இருக்கலாம் ஐயா; மற்றவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லும் வகையில் விளக்கிக் கூறுங்கள்'' என்ற ஐயனாரின் வேண்டுகோளை நிறைவேற்றத் தொடங்கினேன்:

> ''குரு வென்பது பெருமையிற் சிறந்தோன் என்று பொருள்படும் 'குரிசில்' என்னுந் தமிழ்ச் சொல்லினின்றும் பிறந்து ஆசிரியன் என்ற பொருளில் வழங்குவது. குருவன், குரவன் என்பவையும் அன்ன. இஃதுணராதார் இவற்றையும் வடசொல்லென்றுரைப்பர்'' என்பது மறைமலையடிகளார் கருத்து.

இப்படி நான் கூறியவுடன் ''ஆம்; இதனை நான் திருவாசக

விரிவுரையிற் படித்ததாக நினைவு; சரிதானா?'' என்று கூறியபடி நிமிர்ந்து உட்கார்ந்தார் ஐயனார்.

ஆமாம்; அது சரிதான், திருவாசகம் போற்றித் திருகவலில்.

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி யருளிய பெருமையை

என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளன குருவுக்குத்தான் அடிகளார் மேற்கண்டவாறு விளக்கம் தருகிறார்.

இப்படி நான் கூறியது கேட்ட ஐயனார் அது சரி ஐயா, பாவாணர் என்ன சொல்கிறார்? என்று வினவி, என் வாய்ப்பிறப் பிற்காகக் காத்திருந்தார்.

மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் கருத்தைச் சற்று விரிவாகவே ஐயனாருக்கு விளக்கிக் கூறினேன். அது வருமாறு:

குரு என்னுஞ் சொல் மூவகைப் பொருளில் வழங்கப்பெற்று வருகின்றது; வடமொழியிலும் இடம் பெற்றுள்ளது.

1 உருத்தல் என்றால் பெருஞ்சினங் கொள்ளுதல் என்று பொருள். உருத்தல் என்பதிலுள்ள உரு, குரு என்றாகிக் குருத்தல் என நின்று சினத்தல் என்ற பொருளைப் பெறுகிறது.

இருக்கு வேதத்தில்-குருத்(dh) என்னுஞ் சொல் மேற் கூறியாங்குப் பெருஞ்சினங் கொள்ளுதல் என்ற பொருளில் வழங்கப் பெற்றுள்ளது.

அன்றியும் குரு என்பது வெப்பப் பொருள் பெற்று வெப்பக் கொப்புளத்திற்கும் பெயராக வழங்கப் பெறுகின்றது.

2 குரு—ஒளி என்னும் பொருளிலும் வழங்கப் பெற்றுள்ளது:

'குரு மணித் தாலி' என்பதிலுள்ள குரு ஒளிப் பொருள் கொண்டதே.

குருவுங் கெழுவும் நிறனா கும்மே
என்பது தொல்காப்பியம்.

இக் குரு வடமொழியில் க்ரு (gh)—எரி, ஒளிர் என்னும் பொருளில் இடம் பெற்றுள்ளது.

3 குரு என்னுஞ் சொல் பருமன், பெருமை, கனம், தந்தை, ஆசிரியன், குரவன்—அரசன் என்னும் பொருள்களில் வழங்கப் பெற்றுள்ளது:

'குருமை எய்திய குண நிலை'

என்னுஞ் சீவக சிந்தாமணிப் பாடல் (2748) பகுதியில் இடம் பெற்றுள்ள 'குருமை' என்னுஞ் சொல் பெருமை என்னும் பொருளிலேயே திருத்தக்க தேவரால் ஆளப் பெற்றுள்ளது. புற நானூற்றில் (32) இடம் பெற்றுள்ள

பசுமட் குரூஉத்திரள் போல

என்னும் உவமையில் குரு கனம் என்னும் பொருளைத் தாங்கி நிற்கின்றது.

பருப்பொருள் கருத்தான பெருமை கனத்தினின்று, நுண்பொருட் கருத்தான பெருமை கனம் தோன்றும்.

குருசில், குரிசில் என வழங்கப்பட்டு வருஞ் சொற்கள் குருவின் வளர்ச்சி நிலைகளே. அவை தலைவன் என்னும் பொருளுடைமை 'போர்மிகு குருசில்' எனும் பதிற்றுப்பத்து (31:36) அடியாலும், 'குரிசில்' எனும் திருமுருகாற்றுப்படை (276) ஆட்சியாலும் அறியப்படும்.

பெற்றோரைக் குறிக்கும் 'இருமுது குரவர்' என்பதிலும், தாய் தந்தை, தமையன், ஆசிரியன், அரசன் ஆகியோரைக் குறிக்கும், 'ஐம்பெருங் குரவர்' என்பதிலும் இடம்பெற்றுள்ள குரவர் என்னுஞ் சொல் குரு என்பதன் திரிபேயாகும்.

குரு—குரை எனப் பெருமைப் பொருள் குறித்து வந்த குரவன் என்பதே வடமொழியில் குரவஹ் (g) என்று உள்ளது.

பருமையுங் கனமுமே வேதத்திற் கொள்ளப்பட்ட பொருள்கள்; பிறவெல்லாம் பிந்தினவே.

பாவாணர் கருத்துப் பற்றிய எனது விளக்கத்தைக் கேட்ட ஐயனார் பணயப் பொருளைக் கைப்பற்றி விட்டது போன்ற வெற்றிக் களிப்புடன் விடைபெற்றார். O

வழக்குச் செலவுகள்: ஒரு வேண்டுகோள்!

பார்ப்பனக் கொடுநெறி அரசு, தமிழர் உரிமைக்காகப் போராடிவரும் நம் பாவலரேறு மீதும் அவர் தம் மகனார் மீதும் 'தடா' என்னும் கொடிய அடக்குமுறைச் சட்டத்தை ஏவிச் சிறையிலடைத்திருப்பதை அன்பர்கள் அறிவார்கள். இவர்களைப் பிணையலில் வெளியே கொண்டு வருவதற்கும், தொடர்ந்து வழக்கு நடத்துவதற்கும் பொருள் தேவை என்பதை அன்பர்கள் உணவார்கள்.

ஆகவே வழக்குச் செலவுகளுக்குப் பங்கேற்றுக் கழகத்தினரும் அன்பர்களும் ஆர்வலர்களும் நன்கொடை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்.

சென்னைக்கு வர அணியமாகுங்கள்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நான்கு நூல்கள் வெளியீட்டு விழா

பாவலரேறு அவர்களின் அறுபானாண்டு நிறைவு நாளையொட்டி' சென்னையில், அவரின் அரிய படைப்புகள் ஆகிய கீழ்வரும் நான்கு நூல்கள் வெளியிடப் பெறும்.
(இடம், நாள் பின்னர்த் தெரிவிக்கப்பெறும்)

1. திருக்குறள் மெய்ப்பொருள் உரைச் சுருக்கம்—(முதல பகுதி)
2. பெருஞ்சித்திரனார் கட்டுரைகள் இளமை விடியல்—(முதல் தொகுதி)
3. தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்!
4. நெருப்பாற்றில் எதிர் நீச்சல்!
   (புரட்சிப் பாடல்கள்)

O நான்கு நூல்களையும் அறிஞர்கள் நால்வர் வெளியிடுவர். அறிஞர்கள் பலர் திறனாய்வு செய்து உரையாற்றுவர்.

O நூல்கள் வரலாற்றில் இஃதொரு பொன்னாள்!

O திருக்குறளில் மூடியிருந்த மதவியல்,மூடநம்பிக்கை, அறியாமை, பொருள் தவறு ஆகிய மேகங்களும் பனி மூட்டங்களும் அகன்று, தமிழியல் அறத்தை நிலைநாட்டித் திருக்குறளுக்கு ஒளியேற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள்!

O வந்து கலந்து கொள்ளத் தவறாதீர்கள்!

வட வெழுத்துகளான ஸ, ஷ, ஜ, க்ஷ, ஹ வைத் தமிழில் பயன்படுத்தலாமா?

'தென்மொழி'யின் கருத்துரை.

(முன்னுரை : அண்மையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆறு. அழகப்பனார் தம் பல்கலைக் கழகம், அறிவியல் தமிழ்வளர்ச்சி, குறித்து ஆக்க முழுமையாகச் சிந்தித்து வருவதாகவும், அதன் தொடர்பாகத் தமிழ் எழுத்துகள் குறித்த கருத்தரங்கு ஒன்றினை நடத்தக் கருதுகின்றதாகவும், இந்நிலையில் தமிழில் ஸ,ஷ,ஜ,க்ஷ,ஹ— என்னும் வடவெழுத்துகளைப் பயன்படுத்துவது பற்றி ஒரு முடிவுக்கு வருவது, அறிவியல் தமிழின் விரைந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையுமென அறிவியலாளர்கள் கருதுவதாகவும், எனவே இச்சிக்கலை முன்வைத்துக் கருத்தரங்கத்தில் படிக்கத் தக்கக் கட்டுரையொன்று தேவை என்று தக்க அறிஞர்களைத் தேர்வு செய்து வேண்டுகை விடுத்திருப்பதாகவும் தெரிவித்து, நம் கருத்தையும் தெரிவிக்கக் கூறிக் கேட்டிருந்தனர்.

அக் கருத்தரங்கத்திற்கு விடுக்கப்பெற்ற கட்டுரை, இது. 'தென்மொழி' அன்பர்களுக்கு இவ்விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டி, இதனை இங்கு வெளியிடுகின்றோம். —ஆசிரியர்.)

நம் கருத்தாய்வில் உள்ள வடவெழுத்துகளாகிய ஸ, ஷ, ஜ, க்ஷ, ஹ ஆகிய ஐந்தும் பொதுவாக சமசுக்கிருத எழுத்துகள் என்று கருதப் பெறுகின்றனவே தவிர, அவை உண்மையிலேயே சமசுக்கிருத (sanscrit) எழுத்துகள் அல்ல என்பதே முதலில் கவனிக்க வேண்டுவதாகும்.

அவை வடதிராவிடமாகிய பிராகிருத எழுத்துகளே ஆகும். பைசாசம், மாகதி, சூரசேனியம் என்னும் வடபால் வழங்கும் மூன்று மொழிகளே பிராகிருதம் எனும் பெயரால் குறிப்பிடப் பெறும் மொழிகள். இவற்றுடன் மகாராஷ்டிர மொழியையும் சேர்த்துச் சிலர் நான்கு மொழிகளாகவும் வழங்குவர். ஆனால் அது பொருந்தாது. ஏனெனில், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, மகாராஷ்டிரம் ஆகிய மொழிகள் பஞ்ச திராவிடம் எனப் பெறுவனவாகும். அவை தென் திராவிட மொழிகளாம்.

வட திராவிட மொழிகள் சேர்ந்த பிராகிருதம் தமிழர்கள் வடக்கே சென்று வாழ்ந்தபொழுது அங்குள்ள குளிர்நிலைக் கேற்ப தமிழ்மொழியின் ஒலிப்பு பலவகையிலும் வலிந்தும் மெலிந்தும் உறழ்ந்தும் தடவியும் உருவாகிய—மொழியாகும். காலப்போக்கில் அவர்கள் தங்களது ஒலிப்பிற்குத் தேவையாக மேலும் ஐந்து புதிய ஒலிகளையும் அவற்றுக்கான வரிவடிவங்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறு உருவாக்கிய எழுத்துகளே ஸ,ஷ, ஜ,க்ஷ,ஹ— என்பனவாகும்.

தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறுவதானால் இவ்வெழுத்துகள் வடபுலம் சென்ற தமிழர்களாலேயே உருவாக்கப் பெற்ற தமிழின எழுத்துகளே! இவை பின்னர் ஆரியர்களால் தோற்றுவிக்கப் பெற்ற சமசுக்கிருதத்திலும் இணைத்து வழங்கப் பெற்றன. ஆனால் இவை அம்மொழியின் குறுங்கணக்கு, நெடுங்கணக்கு ஆகியவற்றுள் இல்லை. தனி எழுத்து வரிசையாகவே அவர்களால் இன்று வரை பயிலப்பெறுகின்றன.

காலம், இடம், வழக்கு, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகிய இவ் வட தமிழ் எழுத்துகள், அஃதாவது வடபுலம் சென்று வாழ்ந்த தமிழர்களால் உருவாக்கப் பெற்று, வட திராவிடமாகிய பிராகிருதத்தில் வழங்கப் பெற்று வந்த எழுத்துகள் ஆரியரால் உருவாக்கப் பெற்றவையல்ல ஆகையினாலும், தமிழர்களே தங்கள் ஒலிப்புத் தேவை கருதி உருவாக்கிக் கொண்ட எழுத்துகள் ஆகையினாலும், இவ் வெழுத்துகள் ஆரிய எழுத்துகள் என்று தவறாகக் கருதி ஒதுக்கி வைக்கப்பெற வேண்டுவதில்லை.

மேலும், இன்றைய அறிவியல் வளர்ச்சியில் இவ் வைத்தொலிகளும் அவற்றுக்கான எழுத்துகளும், பிறமொழிச் சொற்களை இன்றியமையாதவிடத்து, அவ்வொலிப்புகள் சிதைவுறாமல், தமிழ்மொழியினூடே அவ்வவ்வாறே பயிலுதற்கும் பயன்படுத்துவதற்கும் மிகவும் தேவையானவையாகும். அத்துடன் இன்னும் ஓரிரண்டு ஒலிப்புகளும், அவ்வொலிப்புகளுக்கான வரிவடிவங்களும் கூடத் தமிழுக்கு இன்றைய நிலையில் தேவைப்படலாம். அவை ஆங்கில எழுத்து வரிசையில் உள்ள 'F' 'Z' போன்ற ஒலிகளைக் குறிக்க வேண்டும்படியாக இருக்கலாம். அவற்றைப் பயன் படுத்தவேண்டுவதற்கான எடுத்துக்காட்டுகள்;

1) தமிழில் 'விசிறி' என்பதற்கு ஆங்கிலத்தில் 'பேன்'(Fan) என்று சொல்கிறார்கள்

2) 'சூ' (Zoo) என்பது விலங்குக் காட்சி சாலையாகும்.

—இவை போலும் இடங்களில் அச் சொற்களின் ஒலிப்புகளைத் தமிழில் எழுதிக்காட்ட அவ்வொலிப்புகளுள்ள வரிவடிவங்கள் தேவைப்படுகின்றன அல்லவா? எனவே அவற்றையும் காலத் தேவைக் கருதி இன்றையோ நாளையோ உருவாக்கிக் கொள்வதில் தவறில்லை என்க.

பண்டைய தமிழ் வரிவடிவங்களில் முன்னரே இவ்வாறு எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. எனவே இப்பொழுதும் அம் மாற்றங்களை நம் தேவை கருதி ஏற்படுத்திக் கொள்வதில் தவறுமில்லை: இழுக்குமில்லை. மொழி வளர்ச்சியடையும் பொழுது, எழுத்துகளும் அவ் வளர்ச்சியை ஒட்டிப் புத்தாக்கமும் புதுவடிவமும் பெறத்தான் செய்யும். அம் மாறுதல்களை நாம் ஏற்றுக் கொள்ளாவிடில், நம் மொழியும் காலத்திற் கேற்ப வளராது; அறிவியலறிவும் பெருகாது. அறிவியல் வளர்ச்சிக்

கேற்ப நாம் புதுச் சொற்களைப் படைத்துக் கொள்வதைப் போலவே, புது எழுத்துகளைப் படைத்துக் கொள்வதும், அல்லது ஏற்கனவே நம் தமிழின முன்னோர்கள் வேற்றுப் புலத்தில் கண்டு பிடித்துள்ள எழுத்துகளைப் புழக்கத்திற்குக் கொண்டு வருவதும் வேண்டற் பாலவையே.

10. வேற்று மொழிச் சொற்களை நம் மொழியில் எழுதும் பொழுது,

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'

—என்னும் தொல்காப்பிய(884) நூற்பாவின் கருத்து வெறும் வடபால் மொழிகளுக்கும், அக்காலச் சூழலுக்கும் மட்டுமே ஒருவாறு பொருந்துவதாகலாம். அஃது, அன்றைய நிலையில் ஒருவாறு நிறைவுடைமையாகவும் இருந்திருக்கலாம்.

எடுத்துக்காட்டு: (வடவெழுத்தும் வடசொல் ஒருவுதலும்)

1) ஸர்ப்பம் — சர்ப்பம்.
2) ஸ்தலம் — தலம்.
3) புஷ்பம் — புட்பம்
4) க்ஷணம் — கணம்.
5) ஜீரகம் — சீரகம்.
6) ஜடம் — சடம்.
7) க்ஷேமம் — சேமம்.
8) லக்ஷ்மணன் — இலக்குமணன் (அல்) இலட்சுமணன்.
9) ஹர்த்தால் — அர்த்தால்,
10) பஷ்ரையின் — பஃறையின்
11) மகாராஷ்ட்ரம் — மகாராட்டிரம்.

ஆனால், இன்றைய நிலை வேறு: வடசொற்கள் மட்டுமன்றி, ஐரோப்பியம், சப்பானியம், உருசியம், அரபியம் முதலிய மொழிச் சொற்களில் உள்ள இடுகுறிப் பெயர்ச் சொற்களையும் (Proper names), அறிவியல் (Scientific), கணக்கியல் (Mathematical) சொற்களையும் நாம் தமிழியல் கல்விக்குப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அவ்வவ் விடங்களிலெல்லாம் கட்டாயம் ஒலிப்பு மாறாமல் அச்சொற்களை நாம் குறிப்பிட வேண்டியுள்ளது.

(எ—டு)

சிக்கலுக்குரிய சொற்கள்.		இக்கால் பெயர்ப்புச் செய்துவரும் முறை. (சரியில்லாதது)		உண்மையில் பெயர்க்க வேண்டிய முறை (சரியானது),
Afganistan	—	ஆப்கானித்தான்	—	ஆப்கானிஸ்தான்
Australia	—	ஆத்திரேலியா (அல்) ஆசுத்திரேலியா	—	ஆஸ்திரேலியா.

Algeria	—	அல்சீரியா	—	அல்ஜீரியா
August	—	ஆகத்து (அல்) ஆகசுட்டு (அல்) ஆஃககசுடு	—	ஆகஸ்டு
Archimedes	—	ஆர்க்கிமிடுக	—	ஆர்க்மிடிஸ்
Bernard shaw	—	பெர்னூர்டு சா	—	பெர்னூர்டு ஷா,
தக்ஷண பீடபூமி	—	தக்கணப் பீடபூமி (அல்) தட்சணபீடபூமி	—	தக்ஷணப்பீடபூமி.
Everest		எவரெசுட்டு (அல்) எவரெச்டு	—	எவரெஸ்டு.
Egypt		எகிப்து		ஈஜிப்ட்
Josep stalin	—	சோசப்பு இசுடாலின் (அல்) யோசப்பு தாலின்	—	ஜோஸப் ஸ்டாலின்.
Shakespear	—	சேக்குபியர் (அல்) செகப்பிரியர் (அல்) சேக்கசுபியர்.		ஷேக்ஸ்பியர்.
Scotland		இசுக்காத்துலாந்து (அல்) காத்துலாண்டு		ஸ்காட்லாண்ட்.
Switzerland	—	சுவிட்சர்லாந்து	—	ஸ்விட்சர்லாண்ட்.
Tolstoy	—	டால்சுடாய் (அல்) தால்சுதாய்	—	டால்ஸ்டாய்.

—இத் திருத்திய வகையில் இல்லாமல் ஒலி பெயர்ப்புச் செய்வது, சரியான ஒலிப்பைத் தராத குற்றமும், அத்தகு இயலாமை நம் மொழியில் உள்ளது என்னும் குறையும், நாம் ஒப்புக் கொண்டது போல் ஆகும். இது நம் தமிழ்ச் சொற்களான திருநெல்வேலி, மதுரை, உதக மண்டலம், குமரிமுனை முதலிய சிறப்பு இடுகுறிப் பெயர்களை ஆங்கிலேயர்கள் Tinneveli, Majura, Ootti, Cap Commerin ஆகியவாறு ஒலிபெயர்ப்புச் செய்து கொண்டதைப் போல ஆகிவிடும். இத்தகைய வழக்குகளை நாம் இன்றைய நிலையில் ஒத்துக் கொள்வதில்லை; விரும்புவதும் இல்லை; மாறாகத் தவறு என்றும் சொல்கிறோம். நம் மொழிச் சொற்களை அவர்கள் தவறாக ஒலிபெயர்ப்புச் செய்வதை, நாம் விரும்பாத பொழுது, ஒப்புக்கொள்ளாத பொழுது, தவறு என்று சொல்லித் தவிர்க்கும் பொழுது, அவர்கள் மொழியின் இடுகுறிச் சிறப்புப் பெயர்ச் சொற்களை நாம் தவறாக ஒலிபெயர்ப்புச் செய்து வழங்குவதை அவர்கள் விரும்புவார்களா, ஒப்புவார்களா, ஏற்றுக் கொள்வார்களா என்பதை நாம் நடுநிலையோடு எண்ணிப் பார்த்தல் வேண்டும். இவை போலும் வேற்றுமொழிச் சொற்களை அஃதாவது, சிறப்பு இடுகுறிச் சொற்களை (Proper Nouns) அவற்றின் ஒலிப்பு மாறாமல் நாம் குறிப்பிட வேண்டுவதுதான் அறிவியலுக்கும் ஒலியியலுக்கும் பொருத்தமாக இருக்கும்.

தொடக்கக் காலத்திலிருந்தே, இக்கால, பிற்கால அறிவியல்—அல்லது—வாழ்வியல் வளர்ச்சிக்குரிய அல்லது தேவையான அனைத்துச் சொற்களும் அல்லது அவற்றுக்கான ஒலிப்பு வடிவங்களும் தோன்றிவிட்டன என்று நாம் கருதுதற்கு இயலாதன்றோ? மொழி வளர்ச்சியும், எழுத்து வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியைப் பொறுத்தே அமைய வேண்டுவன—என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

ஆகவே, இன்றைய தேவைக்கும், இனி எதிர்காலத் தேவைக்கும் ஏற்ற மொழியியல் எழுத்தியல் மாற்றங்களை நம் தமிழ் மொழியில் ஏற்றுக் கொள்ளலாம்—ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதிலும், அதனடிப்படையில் குறிப்பாக இப்பொழுது கருத்தாய்வில் உள்ள ஸ, ஷ, ஜ, க்ஷ, ஹ ஆகிய பிராகிருத, அஃதாவது வடதமிழ் எழுத்துகள் நாம் நம் தமிழ்மொழியின் கண் தேவையான இடங்களில் பயின்று வரலாம் என்பதிலும் தவறில்லை; இழுக்குமில்லை என்பதே நம் கருத்தும் அறிவுரையும் ஆகும்.

இத்தகு நடைமுறைக்கும் நாம் மேற்கோண்டுள்ள தூய தமிழ் முயற்சிக்கும் தொடர்பில்லை: எனவே, அதனால் இம் மொழி முயற்சி தடைப்படவும் இடமில்லை, தனித்தமிழ் ஆக்க முயற்சி என்பது வேறு. இவ்வெழுத்துகள் பயன்படுத்தம் என்பது வேறு, இவ்வெழுத்துகளைத் தேவையான ஒலிப்புகளுக்கு நாம் பயன் படுத்தவேண்டும் என்பதால், வேற்றுமொழிச் சொற்களையோ அல்லது சமசுக்கிருதச் சொற்களையோ நம் மொழியில் கலந்து பயன்படுத்த வேண்டும் என்பது பொருள் இல்லை. பிறமொழிச் சொற்களை நாம் பயன்படுத்தும் பொழுது அவற்றைத் தூய தமிழில் மொழிபெயர்த்தே பயன்படுத்துதல் வேண்டும். வேறு எந்தக் காரணம் கருதியும் அவற்றை மொழிபெயர்க்காமல்—அதுவும் தூய தமிழில்—மொழிபெயர்க்காமல் பயன்படுத்தவே கூடாது. இன்றியமையாத—தேவையான இடங்களில் மட்டும்—அஃதாவது அவற்றை அப்படியே எடுத்துக் கையாள வேண்டிய—சிறப்புக் குறிப்புச் சொற்கள்—உரிமைப் பெயர்ச் சொற்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டிய இடங்களில் மட்டும்—ஒலிபெயர்த்துப் பயன்படுத்த வேண்டிய பொழுது—அந்த ஒலிப்புகளை அப்படியே எழுதிக் காட்ட நாம் இவ் வடவெழுத்துகளைப் பயன்படுத்துவதில் பிழையில்லை; குற்றமும் இல்லை; இழுக்கும் இல்லை என்று கருதிக் கொள்ளுதல் வேண்டும்—என்பது நம் கருத்து.

இதை, இதுவரை நம் கருத்தாக எங்கும் வெளிப்படுத்தவில்லை. இப்பொழுது நேர்ந்துள்ள இக் கருத்தரங்க வாய்ப்பை இதற்கென நாம் பயன்படுத்திக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம். நன்றி. வணக்கம். பிறபின்னர்.

காளாம்பி

நாடக ஆக்கம்: அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'பாவியக் கொத்'தில் 2—ஆவது பாவியம்)

காட்சி—5

உறுப்பினர் : தாய், தந்தை, அவள்.

இடம் : வீடு

காலம் : நண்பகல்.

நிலை : காதலைத் தடுத்த நிகழ்ச்சிகள் மனத்தில் ஓடும் காட்சி).

தந்தை : (சினத்தோடு வீட்டிற்குள் நுழைந்து) அடியே, என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

தாய் : என்னவாம். ஒரு நாளைக்காவது, சிரித்த முகத்தோடு வந்ததே கிடையாது; என்ன? இப்போ என்னவாம்?

தந்தை : என்ன சொல்ல, உன் மகளெங்கே?

தாய் : எதற்கு?

தந்தை : சீ, முண்டம்! எதற்கா? இவ்வளவு சினத்தோடு அவளை எங்கே என்றால் புரிந்து கொள்ள வேண்டாம்? கூப்பிடு அவளை.

தாய் : அட, செய்தி என்னய்யா? கூப்பிடுகிறேன்.

தந்தை : செய்தியா? செய்தித்தாளில் வரும்.

தாய் : என்னங்க ஒரே கூப்பாடு, இப்ப என்ன குடிமுழுகிப் போச்சு? செய்தி என்ன சொல்லுங்களேன்.

தந்தை : அது பெரிய கதை.

தாய் : இருக்கட்டுமே; சுருக்கிச் சொல்லுங்கள்.

தந்தை : உனக்கு ஏளனமாக இருக்கிறது, என்ன?

தாய் : (அவனைப் பார்த்துக் கையைநீட்டி) இந்த முண்டத்தை வைத்து இத்தனைக் காலமும் அழுதுத் தொலைச்சிட்டேன்.

தந்தை : அது என்னைக் காதலிக்கும்போதல்லவா தெரிந்திருக்கவேண்டும்.

தாய் : சீ! காதல் கீதல் எல்லாம் இப்போ பேச வேண்டாம்.

தந்தை : காதல் என்றால் இப்போது கசக்குது என்ன? உன் மகள் காதலிக்கத் தொடங்கிவிட்டாள்.

தாய் : அப்பனைப் போல மகள். இருக்கத்தானே செய்யும். யாரையாம்?

தந்தை : ஒரு தாழ்ந்த சாதிக்காரப் பயலை.

தாய் : அப்படீன்னா யாரை?

தந்தை : யாரையா? கீழ வூடு கிருட்டிணன் மகனை; அவன் ஒரு கீழ்ச்சாதிக்காரன்.

தாய் : ஆ! போச்சே! அட மடப்பயல் மகளே, கெடுத்துப் போட்டாளே!

தந்தை : ஏண்டி மடப்பயல் மகளே என்று, என்னை பேசுறே? நானுடி காதலிக்கச் சொன்னேன்?

தாய் : (அழுதுகொண்டு) நானும் சொல்லவில்லையே, குடும்பத்திற்கு இழுக்கல்லவா வந்து சேரும், இருந்து இருந்து; கீழ்ச்சாதிக்காரனைப் போயா காதலிப்பாள்,

தந்தை : அந்தப் பயல் அரசு வேலை பார்க்கிறானும்,

தாய் : என்ன வேலை பார்த்தாலென்னை? சாதிவிட்டு சாதி போனு இழிவாச்சே. (மகளை அழைக்கிறாள்) அடியே மூதி...!

அவள் : என்னம்மா, ஒரே கூப்பாடு,

தந்தை : சீ, நாயே! கூப்பாடா? இங்கே வா, மானங்கெட்டவளே!

அவள் : என்னப்பா? என்ன?

தந்தை : கீழவூடு கிருட்டிணன் மகனை நீ காதலிப்பதாய் ஊருக்குள் ஒரே பேச்சு,

அவள் : அதெல்லாம் பொய்யப்பா, எவளோ எவனோ கட்டிய ஒட்டுக் கதையாக இருக்கும்.

தந்தை : கதையும் இல்லை, ஒன்றுமில்லை, கண்ணாலே பார்த்த உறுதியான செய்தி.

தாய் : உள்ளதைச் சொல்லு!

தந்தை : பார்த்தியாடி, உன் புள்ளை அழகை!

தாய் : (சிணுங்கி அழுதுகொண்டு) நான் அப்பவே சொன்னேன். நீங்கள் என்னைக் காதலிக்க வேண்டாம் என்று, நான் அழகாய் இருப்பதால் பிள்ளையும் அழகா பிறக்கும் என்று கேட்டீர்களா? ஒற்றைக் காலில் நின்றீர்களே, இப்ப அழகுதானே இக் கேட்டுக்குக் கரணியம்!

தந்தை: அதுவேறே செருக்கா கழுதே! நாம் ஒரே சாதியில் காதலித்தோம், சரியாய்ப் போச்சு, இவளை மாதிரி சாதிவிட்டுச் சாதியா?

தாய் : ஒருபடி மேலே போகிறான்,

அவள் : அவரும் நம்ம சாதிதானப்பா?

தந்தை : நம்ம சாதியா? கூர்கெட்டவளே, அவன் தாழ்ந்தவன்.

அவள் : இல்லப்பா அவரும் தமிழன்தான்.

தந்தை : நான் மட்டுமென்ன ஆங்கிலேயனா? தமிழன்தானே!

அவள் : அதைத்தான் நானும் சொல்கிறேன், தமிழன் என்று,

தந்தை : இப்ப என்னடி சொல்லப் போற?

அவள் : நான் ஒன்றும் சொல்லவில்லே.

தந்தை : சரி, இன்றுமுதல் நீ வீட்டைவிட்டு வெளியே போகக் கூடாது. போய்ப் படு எழுந்த, தொலைச்சிப் போடுவேன், தொலைச்சி. (திரை)

காட்சி—6

உறுப்பினர் : அவள், அவன், தாய்.

இடம் : வீடு—பின் ஆற்றங்கரை.

காலம் : காலை.

நிலை : பழைய எண்ண அலைகளின் காட்சி.

தாய் : (மகளை) அடியே,

அவள் : என்னம்மா?

தாய் : அழுக்குத் துணிமணிகளையெல்லாம் எடு. ஆற்றிற்குப் போய்க் குளித்துவிட்டு வரலாம்.

அவள் : (மகிழ்ச்சியோடு அழுக்குத் துணிகளை எடுத்து ஒரு மூட்டை கட்டுகிறாள். ஒரு சோற்றுப் பொட்டலத்தையும் எடுத்துக் கொண்டு) அம்மா எல்லாத் துணிகளையும் சேர்த்துப் பெரிய மூட்டையாகக் கட்டிவிட்டேன்.

தாய் : சரி, புறப்படு. வீட்டுத் திறவுகோலை எடுத்துக் கதவைப் பூட்டு.

அவள் : (வீட்டுக் கதவைப் பூட்டுகிறாள்) பூட்டிவிட்டேன்.

தாய் : சரி, வா போகலாம் (இருவரும் போகிறார்கள்)

ஆற்றங்கரையில் காட்சி மாற்றம்.

அவன் : (கரையின் அண்மையில் ஓர் ஒதுக்குப்புறத்தில் அவன் ஒளிந்திருக்கிறான்).

அவள் : (அவனைக் கண்டு விட்டாள்) அம்மா நீங்கள் படித்துறைக்குப் போங்கள். நான் இந்த மறைவிடத்தில் ஒதுங்கிவிட்டு வருகிறேன்.

தாய் : கொடு அவற்றை (மூட்டையை வாங்கி) விரைவாக வந்துவிடு. நான் போகிறேன்.

அவள் : (மகிழ்ச்சியோடு, அவனை அழைத்து) இந்தாங்க; கூ! உங்களைத்தான்.

அவன் : (அண்மை வந்து) உன் அன்னை வந்தாரே.

அவள் : மெதுவாய்ப் பேசுங்கள் (சோற்றுப் போட்டலத்தைக் கொடுத்து) நான் சொன்னபடி வரமுடியாமல் போகுமோ என்று நினைத்தேன். சாப்பிட்டுவிட்டுப் போங்கள், இனி நாம் சந்திக்க முடியாது.

அவன் : ஏன்?

அவள்: நம் காதல் செய்தி தெரிந்துவிட்டது. என்னை வீட்டிற்குள் போட்டுப் பூட்டிவிட்டார்கள். என் அன்னை என்ன நினைத்தார்களோ ஆற்றுக்கு அழைத்து வந்தார்.

அவன் : அப்படியானால் நம் காதல் தோல்விதானா?

அவள் : சொல்ல முடியாது. வெற்றிக்கு வந்தாலும் வரலாம். இப்போது குறுக்கிடுவது சாதி என்ற கழுசடை.

அவன் : நானும் நினைத்தேன்; நாம் இருவரும் ஓடிவிட்டால் என்ன?

அவள் : எங்கே ஓட முடியும்? எங்கே போனாலும் சாதி விளைந்து கிடக்கிறது. சாதிவெறிக்குத் தப்பவே முடியாது. அதனால் உங்களுக்கு எதுவும் நடந்துவிடக் கூடாது. அதற்காகவே அஞ்சுகிறேன்

அவன் : தற்கொலை செய்து கொள்வோமா?

அவள் : சீ. கோழைத்தனம் என் பெற்றோருக்கு நான் ஒருத்தியே பிள்ளை. அதனால் அதற்கு நான் உடன்படேன். என்னை வளர்த்த பெற்றோர் வருந்தி அழுதே செத்துப் போவார்கள்; நன்றிகெட்டவள் நான் அல்லள். நீங்களும் அதைச் செய்ய வேண்டாம். பிறந்தது உயிர் வாழத்தானே.

அவன் அதுசரி, உன்னை என்னால் மறக்கமுடியாதே?

அவள் : நானும் அப்படித்தான், உங்கள் நினைவாகவே நீங்கள் அளித்த (அணியைக்காட்டி) இவ்வணியைத்தான் தாங்களாகக் கருதிக் கொள்வேன்.

அவன் : அப்படியானால் உன்னை வேறு ஒருவனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்துவிடுவார்கள். அப்படித்தானே?

அவள் : அதற்கு நான் உடன்படேன்.

அவன் : நீ என்ன செய்யமுடியும்?

அவள் : போராடிப் பார்ப்பேன்.

அவன் : முடியாவிட்டால்...?

அவள் : திருமணம் ஆகாமலே இருந்து விடுவேன்.

அவன் : உன் பெற்றோர் விடமாட்டார்களே.

அவள் : ஆமாம்.முயற்சி திருவினை ஆக்காமலா போகும்;

அவன் : சாதி இருக்கிறதே, தமிழரைப் பிரிக்க.

அவள் : (அவள் தன்தாய் நிற்கும் இடம் நோக்கி) அம்மா- இங்கேயே பார்க்கிறார் .விரைவில் போய்விடுங்கள். சாதி இருக்- கும் வரை காதலுக்கு முழு வெற்றிக் கிட்டாது.

அவன் : என்ன செய்யலாம்?

அவள் : சாதியைக் கருவியாக்கி அரசியல் நடத்துபவரையும் சாதியை இயக்கும் பின்னணியரையும் களை எடுத்தால்தான் சாதி ஒழியும்.

அவன் : அதைச் செய்ய யார் வருவார்? எல்லாருமே சாதியை ஒட்டவைத்துக் கொண்டு அலைகிறார்களே, அவனவன் சாதியை அல்லவா, புகழ்ந்து வரலாற்றோடு பிணைத்துப் பேசிக் கொண்டிருக்கிறான்.

அவள் : அதனாலேயே இந்தத் தொல்லை. சரி, நீங்கள் போய் விடுங்கள். அம்மா இங்குப் பார்க்கிறார்கள் (அவன் போய் விடுகிறான்).

தாய் : அடியே! அங்கு என்ன செய்கிறாய்? வா!

அவள் : இதோ வந்துவிட்டேன்.(தாயிடம் போய்ச் சேர்ந்து கொண்டாள்.) (திரை) (தொடரும்)

கையூட்டின் வளர்ச்சியும் கலங்கி நிற்கும் ஏழைகளும்!

— அதியமான் —

இந்திய அரசியல் சட்டம் நான்காம் பாகம் 41-ஆம் எண்ணின்படி இந்நாட்டில் வாழும் மக்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு மேலும் வாழ்வதற்கான ஏந்துகள் ஆகியவற்றை அரசு வழங்க வேண்டும். ஆளும் அரசியல் கட்சிகள் யாவற்றையும் வழங்குவதாய்ப் பறைசாற்றி வருகின்றன. உண்மையில் அவர்கள் ஏந்துகளை எப்படி வழங்குகிறார்கள், என்பதை இந்நாட்டு மக்கள் நன்கு பார்த்து, ஆட்சியை நடத்துகின்றவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள், என்பதை விரைவில் உணர்ந்து முடிவு செய்யவேண்டும். அல்லாக்கால் ஏழை எளியவர்கள்—ஏன், நடுத்தர மக்களும்கூடத் துன்பத்தில் ஆழ்ந்திடுவர்.

கல்வி :

இந்த நாடு அடிமையாக வெள்ளையரிடம் இருந்தது என்பது எவ்வளவு உண்மையோ, அதேபோன்று மக்களும் சிந்திக்காமல் அடிமையாகவே 'விதி' எனக் கூறி மூடர்களாக வாழ்கின்றனர். இந்திய நாடு உரிமை(சுதந்திரம்)பெற்று நாற்பத்தைந்து ஆண்டுகளாகியும் நாட்டில் கல்வி வளர்ச்சி அடைந்திருக்கிறதா? இல்லை. அரசியல் சட்டம், நான்காம் பாகம் 45ஆம் எண் கூறும் விளக்கம், இந்த அரசியல் கட்டளைத் துவக்கப்பட்டுப் பத்து ஆண்டுகளுக்குள் குழந்தைகள் அனைவரும் பதினான்கு அகவை முடிவடையும் வரையில் இலவயக் கட்டாயக்கல்வி பெறுவதற்கானஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும். நாற்பத்தைந்து ஆண்டுகளாகியும் எந்த ஆளுங்கட்சியாவது இந்தச் சட்டத்தை மதித்திருக்கிறதா? நடைமுறைப்படுத்திருக்கிறார்களா? இல்லை.

இலவயக் கல்வி அளிக்கவேண்டும் என்ற கருத்திற்கு மாறாக, கல்வியை வணிக நோக்கத்தோடு பல ஆண்டுகளாக இயங்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாடு முழுவதும் ஆங்கிலப் பள்ளிகளைப் பலர் தோற்றுவித்து மக்களை ஏமாற்றுவதற்காகக் கவர்ச்சிப் புனைவு செய்து, நன்கொடை என்ற பெயரால் கையூட்டு அளவிற்கு மிகுதியாக மக்களிடமிருந்து கொள்ளையடிக்கிறார்கள். ஆங்கிலப் பள்ளிகளுக்கு அரசு ஊக்கம் கொடுத்து வருவதாலும், தமிழ் பயிற்று மொழியாக இல்லாக் கரணியத்தாலும் அப்பள்ளிகளில் கொள்ளையடிப்புகள் ஈவு இரக்கமின்றி மிகுதியாக நடந்து கொண்டிருக்கின்றன. இச்செயல் மாந்தநேய மற்ற மறச்செயல். ஒரு பிள்ளையை நாற்றங்கால் முதல் வகுப்பில் (L.K.G)சேர்த்துப் படித்து வர ஏறத்தாழ பெற்றோர் உருபாய் 3000 வரை செலவு செய்ய வேண்டியுள்ளது. வகுப்புகள் கூடக் கூட இந் தொகை பல வகையில் கூடுதலாகும். ஒரு பிள்ளை பள்ளி இறுதி வகுப்பை (S.S.L.C or Matriculation) முடித்துவிட்டு வெளிவருவதற்கு பத்தாயிரம் முதல் பதினைந்தாயிரம் உருபாய் வரை செலவா-

இன்றது எனக் கூறுகிறார்கள். இச் செலவை ஓர் ஏழை அஃதாவது கூலி வேலை செய்பவரோ அல்லது உழவுத் தொழிலை நம்பி வாழுகின்றவரோ செலவிட முடியுமா? இப் பள்ளிகளை நடத்துநர்களிடம் கேட்டால், இப்பள்ளிக்கு இசைவு பெற்றுவர அமைச்சர்களுக்கு இலக்கக்கணக்கில் பணம் கொடுக்கிறோம், அதனால் தாங்கள் மக்களிடம் தண்டிப் பெறுகிறோம் என்று கூசாமல் சொல்கின்றனர். என்ன கொடுமை! கையூட்டை வாங்குவோரைத் தண்டிக்க வேண்டியவர்களே கையூட்டு வாங்கினால் ,பயிரையே வேலி மேய்கிறது' என்ற பழமொழியை உறுதிபடுத்துகிறார்கள்.

இதுபோன்றே கல்லூரிகளிலும் மருத்துவம், பொறியியல், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், தொழிற்கல்வி பயிலும் நிலையங்களிலும் கையூட்டுப் பெறும் செயல் வானளாவி நடைபெற்று வருகின்றது. பிள்ளைகள் படிப்பதற்குள் பெற்றோர்களுடைய பொருளியல் முழுவதும் கொள்ளை அடிக்கப்படுகிறது; (செல்வம் படைத்தவர்களுடைய நிலைவேறு) எடுத்துக்காட்டு: தினமணி (மதுரைப் பதிப்பு 5-7-91.) மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழில் கல்வி நிலையங்களில் நன்கொடை தண்டல் அசுரவேகத்தில் அதிகரித்து வருகிறது. யார் அதிக நன்கொடை தருகிறார்களோ அவர்களுக்குக் கல்லூரிகளில் அனுமதி என்ற நிலை குறிப்பாக தனியாட்சிக் கல்லூரிகளில் காணப்படுகிறது; தனியாட்சிப் பொறியியற் கல்லூரிகள் பாடங்களைப் பொறுத்து உருபாய் 65000 முதல் ரூ 80000 வரை தண்டல் செய்கின்றன எனக் காட்டுகிறது. படிப்பு முடிந்து வேலைக்குப் போக வேண்டுமானால் வேலைக்குத் தகுந்தவாறு உருபாய் 10000 முதல் ஓர் இலக்கம் வரை கையூட்டுக் கொடுக்கவேண்டியுள்ளது. இப்படிக் கொடுக்க இயலாத ஏழைகளின் பிள்ளைகள் வேலையின்றித் திரிகின்றனர். இவர்கள் வறுமையின் கொடுமையால் நெறி தவறிப் பல தவறுகளைச் செய்து சிறை சென்று சீரழிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள்மீதுதான் சட்டம் பாய்கிறது. சில இளைஞர்கள் வேலைகிடைக்காததால் தற்கொலை முயற்சிக்கு ஆளாகிறார்கள். தினமணி,(மதுரைப் பதிப்பு 12-4-92) வேலை கேட்டு (மார்த்தாண்டம்)கன்னியா குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன் 9-ஆம் பக்கல் அன்று மாலை 5மணிக்குத் தீக்குளிக்க முயன்ற 3 பேரை நேசமணிநகர் காவலர்கள் தளை செய்தனர் எனக் கூறுகிறது. மேற்கூறிய தொகைகளைக் கொடுத்து வாங்குவோர் பெரும் செல்வர்களும் கையூட்டுப் பெறுபவர்களுமே! மற்றவர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். கையூட்டுக் கொடுத்து வேலைக்கு வந்தவர்களும் தாங்கள் கொடுத்த கையூட்டுப் பணத்தைத் திரும்பப் பெறவும், மேலும் பணம் ஈட்டும் முயற்சியில் ஈடுபட்டுக் கொள்ளைக்காரர்களாக நாகரிகமாகப் புனைந்து திரிகின்றனர்;

பேராயக் கட்சி ஆளுங் காலந்தொட்டு இன்றைய மறுபதிப்பு—அ.தி.மு.க ஆளுங்கட்சி அமைச்சர்கள் வரை பலர்மீது கையூட்டு ஊழல் வழக்குகள் உள்ளன; நாள் தவறாமல் இச்

செய்திகளை நாள் இதழ்களிலும் ஏனைய இதழ்களிலும் படிக்கிறோம். இக் காலத்தில் கையூட்டு (இலஞ்சம்) எல்லாத்துறைகளிலும் நச்சுச் செடியெனச் செழித்து வளர்ந்து மக்களைக் கொன்றுமென்று தின்று கொண்டிருக்கிறது. எத்துறையிலிருந்தும் கையூட்டின்றி எவ்வகைச் செயலையும் மக்களால் அடைய முடியாமல் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்றனர்.

அமைச்சர்கள்மீது உள்ள கையூட்டு வழக்குகளை உசாவுவதற்காக அதிகார குழுக்கள் (Commission) அமைத்து ஆய்ந்தும், கையூட்டு வாங்கியவர்களைச் சிறைக்குள் தள்ள முடியவில்லை. ஆனால் அரசியல் பணியாளர்கள் மீது மட்டும் கையூட்டு வழக்குகள் போட்டுச் சிறைக்குள் அனுப்பி இருக்கிறார்கள், கையூட்டு வழக்கில் சிக்கியவர்களில் சிலர் நேர்மையானவர்கள். அவர்கள் அமைச்சர்கள் செய்யும் தீச் செயல்களுக்கு ஒத்துவராததால், அவர்கள்மீது பலவகையான வழக்குகளைச் சுவடித்துக் குற்றக்கூண்டில் நிறுத்தி, சிறைக்குள் இருக்கச் செய்துள்ளனர். இதனால் மக்களிடமும் ஞாயம், நேர்மை மறைந்து வருகின்றன.

மாந்த நெறிமுறைகளைக் கூறும் பேராசான் திருவள்ளுவர், அரசனுடைய நல்லாட்சிக்கு இலக்கணம் கூறும்போது, அரசன் மக்களிடம் பொருள் தண்டலைக் கூடக் கண்டிக்கிறார்.

> வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
> கோலொடு நின்றான் இரவு (குறள் 552)

குற்றங்களைக் கண்டு தண்டிக்கும் அரசன் மக்களிடம் பொருள் தாவெனக் கேட்டால் கொலைக் கருவியை வைத்துக் கொண்டு வழிச் செல்வோரை நோக்கி நீவைத்திருக்கும் பொருளைக் கொடு எனத் தட்டிப் பறிக்கும் கள்வனுக்கு ஈடாவான் என அறிவுரை கூறுகிறார். தட்டிப் பறிக்கும் கள்வனுடைய தொழில்தான் நீண்டநாள்களாக நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. இஃது அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் குமுகச் சீர்த்திருத்தக் கழக அமைப்புகளுக்கும் இக் கொடுஞ்செயல் நன்றாகவும், தெளிவாகவும் தெரியும். இருந்தும் தன்னலங் கருதி— செல்வம் ஈட்டிச் செழிப்பான வளமான வாழ்க்கை வாழ வேண்டி, மக்களுடைய முன்னேற்றத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டுக் கையூட்டுச் செழிப்பாக வளரத் துணை நிற்கின்றனர்.

இக் கருத்தை ஆணித்தரமாக இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் கே. ஆர். நாராயணன் வெளிப்படையாகக் கூறுகிறார்: (தினமணி மதுரைப்பதிப்பு 28-10-92.) "பொருளியல் வளர்ச்சி வேகத்தை மிக இழிவாகத் தாக்கமடையச் செய்த எதிர்பாராத மற்றொரு செயல் கையூட்டு (லஞ்சம்) என்று அவர் கூறுகிறார். நாட்டின் பொருளியலிலும் குமுகாயத்திலும் கையூட்டு ஊடுருவி விட்டது. இவற்றைத் தடுத்து அமைப்புமுறையைச் சீராக்க எவ்வகை முயற்சியையும் மேற்கொள்ளாவிட்டால் குமுகாயம்

அல்லது பொருளியலின் எந்தப் பகுதியும் முன்னேறாது'' என்றும் குடியரசுத் துணைத் தலைவர் கே.ஆர். நாரயணன் குறிப்பிட்டார்.

கையூட்டின் வளர்ச்சியாலும், அரசுப்பணம் மக்களுடைய நலனுக்காகப் பயன்படுவதாய்க் கூறிக்கொண்டு அரசை நடத்தும் கட்சிகள் கையாடல் செய்வதாலும், நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் மிகுதியாகி நாட்டின் வளம் குன்றி ஏழைகள் பெருகி அவர்கள். கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உண்மையைக் கீழே குறித்துள்ள நாள் இதழ் வேலையில்லாதார் கணக்கு உறுதிசெய்கிறது.

'தினமணி ('மதுரைப் பதிப்பு 30-6-90) 'வேலை இனியும் கனவல்ல' கட்டுரை:-

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்	53 இலக்கம் பேர்.
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்	71 ,,
மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்	96 ,,
நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில்	1கோடி 71இலக்கம் பேர்.
ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்	2கோடி 21 ,,
ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்	2 கோடி 49 ,,

30-6-89 கணக்குப்படி 3 கோடியே 37இலட்சம்பேர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். சிற்றூர்ப்புற ஆண் பெண் படித்தவர் படியாதவர் ஆகிய கணக்கைப் பார்த்தால் வேலை-வாய்ப்பில்லாதோர் 10 கோடியாகும். T-5847

நாற்பத்தைந்து ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் அரசியற் கட்சிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன என்பதை மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அப்படி எண்ணிப் பார்க்காமல் துன்பத்துக்குக் கரணியம் தலையெழுத்து என்று நினைத்து ஏமாறிக் கொண்டிருக்கும் மூட நம்பிக்கையுள்ள மக்கள், இங்கு வாழ்வதாலேயே நாட்டின் நிலை முன்னேற்றம் இல்லாது போனது, மக்களும் நெருப்பில் விழுந்த புழுவெனத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள், செத்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

இன்றைய அ.தி.மு.க ஆட்சியில் மூலை முடுக்குகளிலெல்லாம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க இசைவு வழங்கியுள்ளனர். ஒவ்வொரு பள்ளிக்கும் இலக்கக்கணக்கில் கையூட்டுக் கொடுத்துள்ளதாய்ப் பள்ளியை நடத்தும் பொறுப்பாளர்கள் (நிர்வாகிகள்) கூறுகிறார்கள். இப்போது திறந்திருக்கும் ஆசிரியர்ப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்று முடித்துவிட்டு வெளிவரும் ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்குமா? சிந்தித்தால் உடல் நடுங்கும். இப்போதைய நிலையில் இவர்களுக்கு வேலை கிடைக்குமா? எனச் சிந்திக்க வேண்டும்.

தினமணி (மதுரைப்பதிப்பு 12-3-92) வாசகர் மன்றம் என்ற பகுதியில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த வி.சி. செபமணி அவர்கள் எழுதிய கடிதம்:-

மூன்றும் நான்காம் வகுப்புகளுக்கு ஒரே ஆசிரியர் பாடம் நடத்தும் பள்ளிகள் 35 விழுக்காடு உள்ளன.

தமிழகத்தில் மொத்தத் தொடக்கப் பள்ளிகள் 29, 907. இதில் பணிபுரியும் ஆசிரியர்கள் 71,336, ஆசிரியைகள் 48,585 ஆண்டுதோறும் ஓய்வு பெறுபவர்கள் 4000பேர், புதிய சேர்க்கை மூலம் புதியவாக உருவாக்கப்படும் பணியிடங்கள் வேறு. ஆனல் ஆண்டுதோறும் இந்த இடங்கள் முறையாக நிரப்பப்படுவதும் இல்லை. புதிய அமர்த்தம் செய்யப்படுவதும் இல்லை ஆனல் ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு வேலைக்காக காத்திருப்போர் 45,000 பேர் உள்ளனர்.

இப்படிப்பட்ட நிலைமையில் பேராயக் கட்சியின் வேலை அமர்த்தத் தடைச் சட்டம் வேறு நடைமுறையில் உள்ளது. இப்படிப்பட்ட நிலைகள் யாவும் கையூட்டால் ஏற்படுகின்றன என்பதை மக்கள் உணர வேண்டும்.

நாட்டில் பொருளியல் நெருக்கடி ஏற்படுவதற்கும் இப்படிப்பட்ட நிலையே மூலமாகும். அரசியல் கட்சிகளில் பதவியில் இருந்தவர்களுடைய, இருப்பவர்களுடைய சொத்துகளைக் கணக்கிட்டு கிண்டி எடுத்தால் இந்தப் பணப் புதையல்களைக் காணலாம். இந்தப் பணப் புதையல்கள் யாவும் மக்களுடைய பணம். எடுத்துக்காட்டாக இந்திராகாந்தியின் சொத்தின் மதிப்பு இராணி இதழ் 19-5-85ல் வெளியானது.

இந்திராகாந்தி 1981ஆம் ஆண்டு எழுதிய ஆவணம் (மேனகா வீட்டை விட்டு வெளியேறும் முன்பு எழுதியது)இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

இந்திரா காந்தியின் சொத்தின் மதிப்பு 21 இலக்கத்து 68ஆயிரத்து 297உருபாய்கள்.

1.	பண்ணை வீடுகள் வேளாண்மை நிலங்களின் மதிப்பு	ரூ. 12,25,595
2.	தனியார் குழுமங்களில் வாங்கிய பங்குகள்	ரூ. 1,76,701
3.	பொத்தகங்களின் மூலம் உரிமைத் தொகை	ரூ. 2,29,969
4.	வீட்டில் உள்ள நகைகள் கடிகாரங்களின் மதிப்பு	ரூ. 32,150
5.	வர வேண்டிய கடன்	ரூ. 4,171

எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 16,685,86க்கு மட்டும் கணக்குக் காட்டப்பட்டுள்ளது. இன்னும் மொத்த மதிப்பு 21,68,297-இல் 4,99,711க்கு கணக்கு இல்லை.

இந்து மதத்தைக் காப்போம்; இந்தியாவை உயர்த்துவோம்:

ஆரியப் பார்ப்பனிய முதலாளியக் கூட்டுக்குரல்!

—க. கண்ணன். அறி.இ, கரடிப்பட்டி.

இன்று இந்து மதத்தைக் காப்பதற்குக் கிளம்பியவர்களும், இந்தியாவை உயர்த்தக் கிளம்பியவர்களும் யார் யார் என்பதையும் அவர்கள் வெவ்வேறு அணிகளில் இருந்தாலும் எந்தக் கருத்தில் ஒன்றிணைகின்றனர்? எதில் முரண்படுவதாய் நடிக்கின்றனர் என்பதை ஒடுக்கப்பட்ட—உழைக்கின்ற—தேசிய இன மக்கள் தெளிவாக அறிந்துகொண்டு செயல்பட வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். மதவெறியில் மக்களை மூழ்கடித்துத் தம் ஆளுமையை நிலைநாட்டத் துடிக்கும் ஆரியப் பார்ப்பனர்களையும், இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பதாக நாடகமாடி நம் உழைப்பையும் பொருளையும் உலக முதலாளியத்திடம் அடகு வைத்து விட்ட பெரும் முதலாளிகளையும் நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

இங்கு 'இந்து' என்று பெருமைப்படுபவர்களும் 'இந்தியா'வை உயர்த்துவோம் என்று முழங்குபவர்களும் ஆரியப் பார்ப்பனர்களும் பெரும் முதலாளிகளுமேயாவர். எந்த ஒரு தேசிய இனச் சிந்தனையும் இல்லாத, உழைக்கும் மக்களைப் பல்வேறு வகையில் ஏமாற்றிச் சுரண்டி வாழ்கின்ற பார்ப்பனர்க்கும் முதலாளிகளுக்குந்தான் 'இந்து மதமும்' 'இந்தியா'வும் தேவை-

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இக் கணக்கும் சரியானது என உறுதி கூற இயலாது; ஏனென்றால் இக் கணக்கு இந்திரா காந்தியின் மருமகள் மேனகாவிற்காகக் காட்டப்பட்டதாகத் தெரிகிறது. எனவே சொத்து அவருக்குக் கூடவே இருக்கும்.

அரசியல் கட்சிகளில் இருப்பவர்கள் பணஞ் சுருட்டும் ஆர்வத்திலே முழுமூச்சாக இருக்கிறார்கள். இனி எந்த அரசியல் கட்சிகளும் நாட்டுப் பற்றுடன் மக்கள்மீது அன்புகொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கப் போவதில்லை. அதனால்தான் இன்னும் நாடு வளம் பெறவில்லை. ஏழைகளின் வறுமையும் நீங்கவில்லை. ஏழைகள் நிறைந்த நாடாகயே உள்ளது. ஆளுகின்றவர்கள் செய்யும் கொடுமையான தீச் செயல்களை இனி மக்களே கவனித்து அவர்களைத் திருத்தமுடியும். அவர்களாக மக்களுடைய துன்ப நிலைகளைக் கண்டு போக்கவேண்டும் என எண்ணித் திருந்தார். எனவே மக்களும், மக்களுடைய நலனை விரும்பும் அறிஞர்களும் துணிவுடன் எழுந்து போராடாமல் கையூட்டு ஊழல்களைப் போக்கவே முடியாது.

யாகின்றது. இந்து மதம் இந்திய அரசமைப்பில் கட்டிக் காக்கப் படுவதையும், இந்திய அரசமைப்பைச் சிதையாமல் காப்பதற்கு இந்துமதம் மறைமுகமாக உதவுவதையும், ஒன்றையொன்று நிறைவு செய்துகொள்வதையும் உண்மையான மக்கள் சிந்தனையாளர்கள் விளங்கிக் கொள்ள முடியும். 'வேலிக்கு ஓணான் சான்று, ஓணானுக்கு வேலி சான்று'—என்பதைப் போல் இந்த இரு ஆற்றல்களும் ஒன்றிணைந்து கொண்டு கோடிக்கணக்கான மக்களின் உயிர் வாழும் உரிமையையே காலங்காலமாக மறுத்து வருகின்றன.

'கோயிலைக் கட்டியவன் கோயிலுக்குள் வரக்கூடாது'—என்று தடுத்த மதம் எந்த மதம்?

'ஒரு மாந்தனின் பிறப்பிலிருந்து இறப்புவரை அனைத்திலும் பங்கு கொண்டு உழைத்த மக்களை ஒதுக்கி வைத்த மதம் எந்த மதம்?'

'செருப்புத் தைத்தவன் செருப்பு அணியக் கூடாது'—என்று தடுத்த மதம் எந்த மதம்?

உழைத்தவன் பசியில் வாட உணவு பொருள்களை வேள்வியில் எரித்தது எந்த மதம்?

'உழைப்பவர்கள் எல்லாம் கீழ்ச்சாதி, உழைக்காதவர் எல்லாம் மேல் சாதி'—என்று மதச் சட்டம் போட்டோர் யார்?

இன்று இந்திய, பார்ப்பனிய, முதலாளிய அரசியல் சிறைக் கூடத்திற்குள் அடைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தேசிய இன மக்களும் தங்களின் மொழியை வளர்க்க முடியவில்லை, தங்களின் மொழியில் இறைவனை வழிபட உரிமை மறுக்கப்படுகிறது. தங்களின் இயல்பான பண்பாடுகளை வளர்த்துக் கொள்ள முடியவில்லையென்றால் உங்களின் 'இந்து' மதமும் 'இந்தியா'வும் யாருக்காக இருக்கின்றன?

இன்று இந்தியாவிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் சாதிய, மதவியல், இனவியல் ஒடுக்குமுறையைத் தனியாகவோ அரசு இயந்திரத்தினாலோ எதிர்கொண்டே வாழவேண்டியுள்ளது; அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களும் பெண்களும் மிகுந்த கொடுமைக்குள்ளாகின்றனர். இவற்றோடு இயற்கையின் மாறுபாடுகளால் ஒரு பக்கம் வறட்சியினாலும் மறுபக்கம் புயல் வெள்ளத்தினாலும் மக்கள் சொல்லொண்ணாத் துன்பத்தில் மூழ்கியிருக்கின்றனர். ஆனால் ஆரியப் பார்ப்பனர்களும் முதலாளிகளும் இந்துமத வெறியிலும் மக்களை மேலும் மேலும் சுரண்டுவதிலும் இணைந்து நிற்கின்றனர்.

இந்த மக்களின் துன்பங்களுக்கெல்லாம் மூலக் காரணமாக இருக்கின்ற ஆரியப்பார்ப்பனிய முதலாளிய அரசின் உயிர் நிலையைத் தகர்ப்பதற்குச் சில தேசிய இன மக்கள் அணி திரண்டு விட்டனர். தமிழக மக்களே! நம் எதிரிகளை வீழ்த்துவதற்கும்; பல்வேறு ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்கும் நாமும் அணி திரள்வோம்! வெற்றி பெறுவோம்!! ○

யில் அந்த பார்ப்பனர்களின் மறைமுக சந்திப்பும், தலைமை அமைச்சரின் பரிந்துரையும், இன்னும் எத்தனைக் குளறுபடிகளைச் செய்யக் காத்திருக்கின்றனவோ!

ஆனால் ஒன்று மட்டும் உறுதி, 'டி.என். சேசன் ஒன்றிய பேரவை செயலரானால் தனி ஈழ நோக்கம் வெற்றிபெற இயலுமா?

இந்தப் பார்ப்பன சேசனின் அமர்த்தத்தைத் தடுத்து நிறுத்த எமது உ.த.மு.க. மூலமும், பிற ஆதரவு கழகங்களின் மூலமும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அடுத்து, தென்மொழியிலும், தமிழ் நிலத்திலும், தமிழ்ச்சிட்டிலும் எழுதி வருகின்ற கட்டுரைகள் யாவும் புள்ளி விளக்கங்களடங்கியது, சரியானது, உரிமையுள்ளது; இக் கட்டுரைகளை நாளிதழ்களுக்கும் அனுப்பி மக்களுக்கு இன அறிவு ஊட்டப் பெறுதல் தேவை என எண்ணுகிறேன்; ஏனென்றால் அப்பனுக்கும், ஆத்தாளுக்கும் பிறந்தோம் என்பதை தவிர வேறெந்த இன அறிவும் பெறாதவர் ஏராளம்.

—வேண்டுதல் நிறைவேறும் ஆவலுடன், தனித்தமிழன், பம்பாய்,

O : *1524:* மொழி ஞாயிறு பாவலரேறு அய்யா அவர்களுக்கு, நடுப்பட்டித் தனித்தமிழ் மன்றத்தாரின் அன்பு சான்ற வணக்கங்கள்.

நம் தாய்த் தமிழை, தமிழ்நாட்டைக் காத்திடத் தாங்கள் எடுக்கும் செயற்பாடுகள், நிலைப்பாடுகள், முடிபுகள் அறிவு சான்ற ஆன்றோர்களால் எக்காலமும் வளர்த்தெடுக்கப்படும் என்பது ''உள்ளங்கை நெல்லிக்கனியே''. மிக மிகச் செப்பமான தங்கள் முடிபுகளை எல்லாத் தமிழரும் தலைமேற்கொள்ளும் காலம் வெகுதொலைவில் இல்லை.

இருப்பினும் எம் சிற்றறிவிற்கு எட்டிய வரை ஒரு சிலவற்றை இயம்பிட விரும்புகிறோம். தமிழ்க் குமுகாயம் வீழ்ச்சியுற்றுக் கொண்டு இருப்பதற்கான கரணியம் தமிழறிஞர்களின் ஒற்றுமையின்மை, தமிழர்களின் அறியாமை, கவர்ச்சி, மயக்கம் இவற்றையே முகாமையானவையாக நாம் கருதவேண்டியுள்ளது.

இவற்றுள் அறியாமை என்ற இருளைத் தந்தை பெரியாருக்குப் பின் சுடர்விடும் தங்கள் எழுத்தோவியங்கள் மற்றும் கொள்கை முழக்கங்கள் போன்றவை அகற்றிவிடும் தன்மையுடையனவாயுள்ளன. இவையன்றிமேலும் தமிழ்ப்பகைவர்களின் வலுவான கவர்ச்சிக் கருவியாகப் பயன்படுவது திரைப்படத் துறைதான்.

திரைப்படத் துறையில் தமிழ்ப் பகைவர்கள் தாம் பெற்றுள்ள ஆளுமையைக் கொண்டு தமிழ் அழிப்புக்கு எவ்வெவ் வகையில் முயன்று கொண்டுள்ளனர் என்பது நாம் கண்கூடாகக் காணும் ஒன்றாகும். திரைப்படமே உலகம் எனக் கூறுமளவு இளைஞர்களைக் கவர்ந்திழுத்துவிட்ட ஆற்றல் கொண்ட திரையுலகைத் தமிழறிஞர்கள் கையகப்படுத்தாமல் ஒதுக்கியமை ''செயத் தக்க செய்யாமை யானும் கெடும்'' எனும் குற்றத்தின் பாற்பட்டமை அன்றோ?

திரைப்படத்தின் மாயக் கவர்ச்சியில் மயங்கித் திரியும் தமிழ் இளைஞர்களுக்கு உணர்வூட்டிடத் தமிழுணர்வுகொண்ட அறிஞர்கள் அரிதின் முயன்றுவது திரைப்படத் துறையைத் தன்வயப்படுத்துவதை விடுத்து மாற்றான் ஆளுமைக்குட்பட்டதால் அத்துறையையே வெறுத்து ஒதுக்குவது நன்றாமோ?

மொழி அறிவு என்பது இற்றைநோக்குங்கால் பெரியோர்களும் அறிஞர்களும் மட்டுமே பங்கேற்கும் ஒரு துறையென இளைஞர்கள் கருதும் நிலையே உள்ளது. இவ்விடைவெளி விரிவடைந்து போமெனின் எதிர்காலத்தில் வளர்தமிழைப் பேசுவதே இழிவென இளைஞர்கள் கருதும் நிலை வருமன்றோ!? விளம்பரமும் திரைப்படமும் உலகையே ஆளும்போது, உண்மை நம்பக்கம் என நெஞ்சுரத்தால் கூவினாலும் நம் குரல் எடுபடுமா?

இப்படிக்கு,—பி.வீராசாமி, தனித்தமிழ் மன்றத்தார், நடுப்பட்டி.

O : 1525: அறிவொளியே! வணக்கம். திருக்குறளுக்குப் பலரும் உரையென்ற பெயரில் ஏதோ சில கருத்துகளை வெளிப்படுத்திய பொழுது, அறிவுக்கடலில் மூழ்கி, ஆராய்ச்சிக் காட்டில் அலைந்து தாங்கள் இயற்றிவரும் மெய்ப்பொருள் உரை உலகில் கண்ட புதுமைகளில் ஒன்று. அந்த உயர்ந்த, ஒப்பற்ற உரைக்கு உண்மையில் மண்ணும் ஈடாகாது; விண்ணும் ஈடாகாது. காலத்தால் செய்த அருஞ்செயல் ஞாலம் உள்ளவரை இருக்கும்.

—அன்பு, அருள்மணி, வெங்காலூர்-21.

O : 1526 : அன்பார்ந்த ஐயா வணக்கம்.
...திருக்குறள் பற்றிய அறிவீடுபாட்டில் தங்களை வெல்வார் எவருமிலர்... —அன்புடன் க.தமிழமல்லன், புதுச்சேரி-6.

O : 1527: உயர்திரு ஐயா அவர்கட்கு. தங்களின் நீண்ட ஆராய்ச்சித்திறனை வெளிப்படுத்தவிருக்கும் என்னைப் போன்று எத்தனையோ பேர்கள் இவர்கள் ஆர்வமாய் அறியத் துடிக்கும் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை'யின் மாதிரியைக் கடந்த இரு தென்மொழி இதழ்களிலும் கண்டேன். மிக்க வியப்பாய் உள்ளது. தங்களின் தொடக்க அமைப்பே மிக்க வேறுபாடாய் அமைந்துள்ளது. கடவுள் என்ற சொல்லைத் தாங்களும் தவிர்த்து, இறை முதல் ஒன்றே; அதுவும் 'அற முதல்தான்' என்று தெரிவித்து இருப்பது எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு ஒரு நல்ல திருப்பம்தான்! அமிழ்து என்ற சொல்லுக்கு அருமையான விளக்கம் தந்து யாவரும் சுவைத்த இன்பத்தை வெளிப்படுத்திக் காண்பித்தது மிக்க அருமையே.

ஈரோடு அன்பரின் கருத்தைத்தான் நானும் விரும்புகின்றேன். அஃதாவது உரை சற்று எளிய நடையில் தந்தால் நாங்களும் விளக்கிச் சொல்ல ஏதுவாய் இருக்கும் என எண்ணுகிறேன். தங்களின் விளக்கத்தையும் கண்டேன். என்ன செய்வது? எங்கள் தலைமுறையினர் இப்படித்தான் விளங்கிக்கொள்வர். மன்னிக்கவும்.

—ந. குமார், பனப்பாக்கம்.

O : 1527: பேரன்பு கொண்ட பாவலரேறு ஐயா, அவர்களுக்கு, வணக்கம். திருக்குறள் மெய்ப்பொருள் சுருக்கஉரையைத் தென்மொழியில் கண்டதும் என்னையே சற்று நேரம் மறந்தாற் போலிருந்தது. மகிழ்ச்சியா? வியப்பா? என்றும் அதை இன்ன உணர்ச்சி என்றும் வகைப்படுத்த முடியவில்லை. இதுவே திருக்குறள் மெய்ப்பொருள் விரிவுரை நூல் வெளிவந்தால் பலருடைய அறிவுக்கண் விழிப்படையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை; நூலைத் தமிழ் உலகம் வரவேற்கக் காத்துக் கொண்டுள்ளது.

—சு. திருவாணன், மணலி புதுநகர், சென்னை-103.